Regsitered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

★ நாவிற்கு ருசியும்
★ உடலுக்கு உறுதியும்
அளிப்பது
மொணரு அன் ரோஸ்
பப்படங்கள்
மயில், ரோஸ் மூவர்ண அடையாளங்களைக் கவனித்து வாங்குக.
கண்டிப்பகுதி விநியோகஸ்தர்கள்:
ஜெகஜோதி அன் கோ.
குருநெனியா.

# ஈழநாடு

E'ELA NAD'U

போன் 389 | National TAMIL DAILY | தேசிய தினசரி | தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 | யாழ்ப்பாணம், பிலவ ஐப்பசி 12 ஆம் நாள் | ஜ. அவ்வல் 17 | (28-10-61) | சனிக்கிழமை | இதழ் 220

## 'சிறி' பஸ் தீவிபத்து

# 'இ. போ. ச. ஊழியர் உடந்தை

## அவர்களின் வேலை; இல்லையேல் தொடர்பாவது இருந்திருக்கும்'

## பார்லிமெண்டில் நிதிமந்திரி தகவல்

கொழும்பு. வெள்ளி

**சிங்கள 'சிறி' பஸ் ஒன்று சமீபத்தில் யாழ்ப்பாணத்தில் தீக்கிரையாகியது சம்பந்தமாக நிதிமந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா இன்று பார்லிமெண்டில் விளக்கம் தெரிவித்தார்.**

**"'சிறி' பஸ் தீப்பிடித்த சமயம் அந்த டிப்போவிலிருந்த இ. போ. சபை ஊழியர்கள் எல்லோரினதும் அல்லது ஊழியர்கள் சிலரினது வேலையாகஇருக்கும். வெளியாரின் வேலையாக இருந்தால் அதுவும் இ. போ. சபை ஊழியர்களின் தொடர்புடனேயே நடந்திருக்க முடியும்" என்று திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா தெரிவித்தார்.**

ஜனப்பிரதிநிதிகள் சபையின் இன்றைய கூட்டத்தில் ஒத்திவைப்புப் பிரேரணைமீது அங்கத்தவர்கள் பேசிக்கொண்டிருந்தசமயம் சபைக்குள் பிரவேசித்த நிதிமந்திரியும்பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் பார்லிமெண்டரிக் காரியதரிசியுமான திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்கா, சமீபத்தில் யாழ்ப்பாணத்தில் சிங்கள 'சிறி' பஸ் தீப்பிடித்து எரிந்தது சம்பந்தமாக தமக்கு இப்பொழுதுதான் விபரம் கிடைத்துள்ளதென்றும், தாம் சபையில் முன்னர் தெரிவித்த தற்கிணங்க தீப்பிடித்தது சம்பந்தமான விபரங்களைத் தெரிவிக்க விரும்புவதாகவும் கூறினார்.

"சிறி பஸ் தீப்பிடித்த சமயத்தில் அந்த டிப்போவிலிருந்த இ. போ. சபை ஊழியர்கள் எல்லோரும் அல்லது ஊழியர்கள் சிலருடைய வேலைதான் பஸ் தீப்பிடித்து எரிந்ததற்கு காரணமென்றே எவரும், கிடைத்துள்ள விபரங்களிலிருந்து முடிவுசெய்வர். இத்தீவிபத்தில் வெளியார் எவரும் காரணமாக இருந்தாலும், அச்சமயத்தில் அந்த இ. போ. ச. டிப்போவிலிருந்த ஊழியர்களின் தொடர்புடன் தான் அதைச் செய்திருக்கமுடியும்" என்று நிதிமந்திரி கூறினார்.

திரு. பீலிக்ஸ் பண்டாரநாயக்கா மேலும் கூறியதாவது:-

'இரண்டு 'சிறி' இலக்க பஸ் வண்டிகள் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்படுகின்றன. இவைகள் நகரில் சேவை செய்வதற்கு உபயோகிக்கப்படவேண்டும்'என்ற தகவல், 5-10-61 ல் அச்சமயம் வைத்திய விடுமுறையிலிருந்த பிராந்திய மனேஜருக்குக் கிடைத்தது. 'அடுத்தநாள் 22 சிறி 9455, இலக்கம் கொண்ட ஒருபஸ்ஸும் 22 சிறி 9454 இலக்கமற்றொரு பஸ்ஸும் யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தன.

இந்த இரண்டு பஸ்களையும் பரிசோதித்து சிறு பிழைகளிருந்தால் அவற்றைச்சீர்செய்யுமாறு உதவி பதில் பிராந்திய என்ஜினியருக்கு பிராந்திய மனேஜர் உத்தரவிட்டார். 22 சிறி 9455 இலக்க பஸ் மானிப்பாய் வீதியிலுள்ள டிப்போவில் விடுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டது. 22 சிறி 9454 இலக்க பஸ் பருத்தித்துறைவீதியிலுள்ள கிழக்கு டிப்போவில் விடுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டது. 22 சிறி 9455 பஸ் மேற்கு டிப்போ வாசலுக்குச் சமீபத்தில் வேலிக்கு அருகிலும் மற்ற பஸ் கிழக்குடிப்போவில் உடைந்து போன அரைச்சுவருக்கு அருகிலும் விடப்பட்டிருந்தலைத் கவனிக்கக்கூடியதாகவிருந்தது.

### பழைய பஸ் இருந்த இடத்தில் விடப்பட்டது

மேற்கு டிப்போவில் பஸ்களை விடுவதற்குப் பொறுப்பான ராசையா ஒரு மின்சாரத்தொழிலாளியும்கூட வேலிக்கருகில் முன்புவிடப்பட்டிருந்த பழைய பஸ் ஒன்றை அங்கிருந்து அகற்றிவிட்டு 22 சிறி 9455 பஸ்ஸை அங்கு விடுவதற்கு ராசையா ஒழுங்கு செய்திருந்தார்.

யாழ்ப்பாணம் மேற்கு டிப்போவில் 400 கலன் தண்ணீர் தாங்கியிருக்கிறது. இது மின்சாரத்தில் இயங்கும். 6-10-61 பிற்பகல் இரண்டேகால் மணிக்கு இந்த தாங்கியில் தண்ணீர் நிரம்பிவழிந்தது. அன்றுடம் சேவைசெய்துவிட்டு பஸ்கள் டிப்போவுக்கு மாலையில் வந்துசேர்ந்ததும் அவைகளைக் கழுவுவதற்கும் தொழிலாளர்கள் தங்களைச் சுத்தம் செய்து கொள்வதற்கும் இத்தண்ணீர் உபயோகப்படுத்தப் படுவதுண்டு. அன்று மாலை

(8-ம் பக்கம் பார்க்க)

## 5 புதிய செனட்டர்கள் நியமனம்

கொழும்பு, வெள்ளி

செனட்சபையில் காலியான ஐந்து நியமன செனட்டர்களின் பதவிக்கு புதிதாக ஐந்து பேர்களை கவர்னர் ஜெனரல் சேர் ஒலிவர் குணதிலக்கா இன்று நியமித்தார்.

பிரதமமந்திரியின் சிபார்சின் மீது நியமிக்கப்பட்டுள்ள புதிய செனடடர்கள் வருமாறு:—

1. பண்டித ஜி. பி. விக்கிரமாராச்சி,2. திரு. சி. டி. எஸ. சிறிவர்த்தன, 3. திரு. எஸ. டி. எஸ. சோமரத்தின 4 திரு. ஆர். எல். ஏ. ஐ. கரணகொட 5. திரு. ஈ. எி. பி. லப்ரோய்

புதிய செனட்டர்கள் நியமனம் இன்று அறிவிக்கப்பட்டது.

## டிசம்பரில் பிரதமர் இந்தியா செல்வார்

### நேருவுடன் சம்பாஷணை

கொழும்பு, வெள்ளி

**இலங்கை இந்தியப் பிரச்சினை பற்றி ஸ்ரீ நேருவுடன் பேச்சு வார்த்தை நடத்து முகமாக, பிரதமர் ஸ்ரீமதி பண்டாரநாயக்கா டிசம்பர் மாதம் இந்தியா செல்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.**

இப்பிரச்சினையில் ஏற்பட்டிருக்கும் முட்டுக்கட்டையைத் துரிதமாகத் தீர்ப்பதில் அரசாங்கம் ஆவல் கொண்டிருப்பதாய் அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இன்னும் சில தினங்களில் புதுடில்லியிலுள்ள இலங்கை ஹைகமிஷனர் சேர் ரிச்சார்ட் அலுவிகாரா, இந்திய அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிப்பார் என்றும், பிரதமர்களின் பேச்சு வார்த்தைகளுக்கான நிகழ்ச்சி அட்டவணைகள் பற்றி இதில் முடிவு செய்யப்படுமென்றும் அறிவிக்கப்படுகிறது.

சமீபத்தில் அதிகாரிகளையும், மந்திரிகளையும் கொண்ட உயர்தர மகாநாடு ஒன்றை பிரதமர் கூட்டியதும், இம்மகாநாட்டில் கலந்து கொள்ள சேர் ரிச்சார்ட் புதுடில்லியிலிருந்து அழைக்கப்பட்டதும் தெரிந்ததே.

## புளி இறக்குமதியில் நடக்கும் மோசடி பற்றி புகார்

## உப்பும், மணலும், இதர பொருள்களும்கலந்துள்ளன

— திரு. தஹநாயகா

### பார்லிமெண்டில் வர்த்தகலைசன்ஸ் சட்ட விவாதம்

கொழும்பு, வெள்ளி

**இன்று காலை பார்லிமெண்ட் சபாநாயகர் திரு. ஆர். எஸ். பெல்பொல தலைமையில் கூடியபோது வர்த்தகச் சட்டத்திற்கு லைசன்ஸ் அளிப்பதைத் திருத்தும் ஒரு மசோதாவை வர்த்தக மந்திரி சார்பாக, சபை முதல்வர் திரு. ஸி. பி. டி' சில்வா சமர்ப்பித்தார். நவம்பர் 23ம் திகதிவரை சபையையொத்திவைக்க வேண்டுமென்று கோரும் பிரேரணை ஒன்றையும் அவர் சமர்ப்பித்தார்.**

திரு. தஹநாயகா பேசுகையில் அடிக்கடி இந்தச் சட்டம் சாற்றப்படுவதாயும், இதனால் சாதாரண வியாபாரிகளுக்கு என்ன நடக்கிறதென்பதே தெரியவில்லை என்றும் கூறினார். "1961 செப்டம்பர் 15ம் திகதிக்குப்பின் வர்த்தகம் ஆரம்பிக்கும் எவரும் பதிவு செய்ய விண்ணப்பிக்க வேண்டும் என இச் சட்டம் கூறுகிறது. சிறிய வர்த்தகர்களுக்கு இவ்விதச் சட்டத்திலிருந்து விதிவிலக்களிக்கப்பட வேண்டுமென எல்லா அங்கத்தினர்களும் கேட்டுக் கொண்டும்கூட அவ்விதம் செய்யப்படவில்லை" என்றும் காலி மெம்பர் கூறினார்.

புளி பற்றுக் குறையைக் குறிப்பிட்ட அவர், புளியுடன்

(8-ம் பக்கம் பார்க்க)

## உங்கள் நோய்

சுணைப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணானந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.



தந்தி: றைக்கிளீன்.
போன்: 474.

### சன்லையிட் டையேஸ் அன் றைக்கிளீனஸ்

பட்டு உடைகளை றைக்கிளீன் செய்வதிலும் சாயம் போடுவதிலும் கேட்கும் நேரங்களில் தவணை தவறாதுகொடுப்பதிலும் விருப்பம் போல் பார்சல் மூலம் அனுப்புவதிலும் வடமாகாணத்தில் மிகப்பெரிய ஸ்தாபனம் சன்லையிட்டையேஸ் அன் றைக்கிளீன்ஸ், பஸ் நிலையத்துக்கு முன்பாக, பெரிய கடை, யாழ்ப்பாணம்.


### நன்றி கூறல்

கொழும்பு திறைசேரி இலிகிதரும் எமது பெருமகனும் ஆகிய செல்வன் நா. சண்முகசுந்தரத்திற்கும் நாயன்மார்கட்டு திரு. க. சுப்பிரமணியம் அவர்களின் புதல்வி செல்வி இராசலட்சுமிக்கும் நிகழ்ந்த திருமணத்தின் போது சமுகந்தந்து கொண்டாடி வாழ்த்துக்களும் பரிசுகளும் வழங்கிய உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் எமது உளங்கனிந்த நன்றியைத்தெரிவித்துக்கொள்ளுகின்றோம். சீ. விஜயசுந்தரம், ஸ்டோர் கீப்பர், பலநோக்கு கூட்டுறவுச் சமாசம் தெல்லிப்பளை. சீ. ஆனந்தசுந்தரம் சுகாதாரப் பரிசோதகர், கைதடி. மயிலிட்டி தெற்குதெல்லிப்பளை.

# அரசாங்கத்தின் வரவு செலவு

## திறைசேரி சுற்றறிக்கை

கொழும்பு, வியாழன்

"இன்றைய நிதிநிலைமை மோசமாக இருப்பதால் நாட்டின் வருமானத்தையும் செலவுகளையும் அரசாங்கம் அடிக்கடி பார்வையிட்டு வரவேண்டும். ஒவ்வொரு மாத முடிவிலும் செலவாகிய தொகை எவ்வளவு என்பதையும், அடுத்த மாதம் செலவாகும் தொகை எவ்வளவு என்பதையும் அரசாங்கம் அறிந்திருக்கவேண்டும்."

இவ்வாறு திறைசேரியின் தற்காலிகக் காரியதரிசி திரு. ஷேர்லி அமரசிங்கா, அமைச்சுகளுக்குக்கீழில்லாத இலாகாக்களின் தலைவர்களுக்கும் நிரந்தரக் காரியதரிசிகளுக்கும் தாம் அனுப்பிய சுற்றறிக்கையொன்றில் கூறியுள்ளார்.

அரசாங்கத்தின் தீர்மானம் ஒன்றைத்தொடர்ந்தே திறைசேரிக் காரியதரிசி இச்சுற்றறிக்கையை அனுப்பியுள்ளார். ஒவ்வொரு மாதமுடிவிலும், நிரந்தரக் காரியதரிசிகள் அனைவரும் தமது இலாகாக்களுக்கான மாதாந்த வரவு செலவு பற்றிய விவரங்களைத் திறைசேரியிடம் சமர்ப்பிக்கவேண்டும் என அரசாங்கம்தீர்மானம் செய்தது. இதைத்தொடர்ந்தே திறைசேரிக்காரியதரிசி நிரந்தரக் காரியதரிசிகளுக்கும் இலாகாத்தலைவர்களுக்கும் சுற்றறிக்கையொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

# யாழ். ஆங்கில பாடசாலை அதிபர் மகாநாடு

யாழ்ப்பாணம், வெள்ளி

பாடசாலை பரிபாலனம் பற்றியும், தலைமை யாசிரியர்கள் கடமைபற்றியும் ஆராய்வதற்கென யாழ்ப்பாணம் ஆங்கில பாடசாலைகளின் அதிபர்கள் முக்கிய மாநாடொன்றை வடபகுதி உதவி வித்தியாதிபதி திரு. எஸ். யூ. சோமசேகரம் கூட்டியிருக்கிறார். உத்தியோக ரீதியில் அண்மையில் கொழும்பு சென்று திரும்பியிருக்கும் திரு சோமசேகரம் மிகவிரைவில் வட பகுதியைச் சேர்ந்த வவனியா மாவட்டத்திலும் இப்படியான மாநாட்டைக் கூட்டுவாரெனத் தெரிகிறது.

உதவி வித்தியாதிபதி கூட்டவிருக்கும் யாழ்ப்பாண ஆங்கில பாடசாலை அதிபர்களினது இம்மாநாடு இன்று சனிக்கிழமை காலை 9-30 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. இதற்கான அழைப்புகள் அதிபர்களுக்கு அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

## அறிகுறி கிடையாது

வாஷிங்டன், அக். 26

சமீபத்தில் ராக்கட் மூலம் வானவெளியில் பரப்புவதற்காக அமெரிக்கா அனுப்பி வைத்த நுண்ணிய செப்புக் கம்பிகள் வானவெளியில் இருப்பதற்கான அறிகுறியெதுவுமில்லை யென்று அறிவிக்கப்படுகிறது.

## வறுமையால் சிறுவன் பலி!

இரத்தினபுரி, வியாழன்

ஏழுபிள்ளைகளுககுத்தாயான எச். மொய்ஸா என்னும் இரத்தினபுரியைச் சேர்ந்த பெண் வறுமை காரணமாகத் தமது பிள்ளைகளிக்கு மரவள்ளிக் கிழங்கையே மத்தியான போசனமாகவும் அளிக்க நேரிட்டது.

மொய்ஸாவின் மூன்று வயதுச் சிறுவன் சோமவீர ஜயரத்ன இதன் விளைவாக உயிர் நீக்கும்படியாயிற்று. மரவள்ளிக் கிழங்குண்டபின்னர் சிறுவன் சுகவீனம்கண்டு இரத்தினபுரி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டான். ஆஸ்பத்திரியிலேயே அவன் மரணமானன். சுகாதார அதிகாரி செல்வி டி. சி. விக்ரமசிங்கா சிறுவன் உண்டஉணவில் நச்சுத்தன்மையிருந்ததினலேயே மரணம் ஏற்பட்டது எனக் கூறினர். மரவள்ளிக்கிக்ங்கு நஞ்சினல் மரணம் சம்பவித்தது என்று மரணவிசாரணை அதிகாரி திரு. டி. தென்னக்கோன் தீர்ப்புக் கூறினர்.

## வீட்டுக்குத் தீ வைத்ததாக வழக்கு

### எதிரிகள் விடுதலை

தெல்லிப்பழை, வெள்ளி

புன்னலைக் கட்டுவனைச் சேர்ந்த கணபதி சீனியன் என்பவருக்குச் சொந்தமான வீட்டிற்குத் தீ வைத்து ரூபாய் 20 க்கு நஷ்டமேற்படுத்தியதாக அதே ஊரைச் சேர்ந்த குட்டியன் குண்டுமணி, குட்டியன் பிலேந்திரன் ஆகியோர்மீது சுன்னுகம் பொலிஸாரால் குற்றஞ்சாட்டி மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி டி. தாமோதரம் முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு, விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

குற்றம் நிரூபிக்கப்படாமையால் நீதிபதி எதிரிகளை விடுதலை செய்தார். சுன்னுகம் பொலிஸ் நிலைய இன்ஸ்பெக்டர் திரு. திரு. கே. செபமாலை வழக்கை நடத்தினர்.

## விவேகானந்த சபை சைவ சமய பரீட்சை

கொழும்பு, புதன்

கொழும்பு விவேகானந்த சபையினர் நடாத்தும் அகில இலங்கைச் சைவசமயப் பரீட்சைகள் இவ்வாண்டு நவம்பர் மாதம் 12-ந் திகதி ஆரம்பமாகி நடைபெறும்.

# பிள்ளைகளின் வளர்ச்சிக்காக உழைத்தல்வேண்டும்

## தலைமையாசிரியர் உரை

சாவகச்சேரி, வெள்ளி

"பெற்றோர் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புவது மட்டும் போதாது. அவர்கள் பாடசாலைக்குச் சென்று பிள்ளையின் கல்வி நிலையை ஆசிரியரிடம் கேட்டுக் குறைபாடுகளை நிவர்த்தி செய்யவேண்டும். அதற்காகவே பெற்றோர் ஆசிரியர் சங்கம் நிறுவப்பட்டுள்ளது."

இவ்வாறு பூநகரி நல்லூர் அரசினர் பாடசாலைத் தலைமை ஆசிரியர் திரு. டீ. எம். சுவாம் பிள்ளை பெற்றோர் - ஆசிரியர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கிப் பேசும்போது குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசியதாவது.

"ஆசிரியர்களாகிய நாங்களும் சம்பளத்துக்கு வேலை செய்வதாக எண்ணுது, நமது பிள்ளைகளின் வளர்ச்சிக்காக உழைக்க வேண்டும். அப்பொது எமது தொழிலில்வெற்றியடைவோம்"

பின்வருவோர் புதுவருட உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பெற்றனர்.

தலைவர்: திரு. டீ. எம். சுவாம் பிள்ளை, உப-தலைவர்: திரு. க. செல்லப்பா, காரியதரிசி: திரு. க. கதிர்காமநாதன், உப-காரியதரிசி: திரு.மு.கணபதிப்பிள்ளை, தனதிகாரி: திரு. சி. ஆறுமுகம், கணக்குப் பரிசோதகர்: திரு. நா. இராமலிங்கம். செயற்குழுவினரும் தெரிவு செய்யப்பெற்றனர்.

## தேயிலை மலை தேர்தல் கூட்டம்

நாவலப்பிட்டி, வெள்ளி

கல்பொடவைச் சேர்ந்த தேயிலைமலைதோட்ட வருடாந்த தேர்தல் கூட்டம் இ. தொ. காங்கிரஸ் நாவலப்பிட்டி ஜில்லா உதவிக்காரியதரிசி திரு. ஏ. வி. சந்தனம் தலைமையில் நடைபெற்றது.

அதில் தெரிவு செய்யப்பட்ட உத்தியோகஸ்தர்கள் பின்வருமாறு:-

தலைவர்: திரு. வி. இராமன், காரியதரிசி: திரு. எம். முத்துசாமி, பொக்கிஷதார்: திரு கூசை மாணிக்கம் கங்காணி, கமிட்டி அங்கத்தினர்: திருவாளர்கள் கே. அருளப்பன், மணிமுத்து, ஆண்டிக்கங்காணி, ஆர்.முத்து, பங்கார்சாமி, எஸ். செபஸ்தி, ஆர். இராமசாமி.

**மாதர்கமிட்டி**

தலைவி: ரம்மெனிக்கா, காரியதரிசி: ஏ. கருப்பி, பொக்கிஷதார்: சி. மாரியாயி, கமிட்டி அங்கத்தினர்: கே. பூரணம், பி பெரியகருப்பி, பி. ராக்காயி இ. சி. பூச்சி, ஆர். பூச்சி, கே. காளி, சே. காளியம்மா, எம். சிட்டு, வி. சின்னப்பிள்ளை, ஆர். சின்னப்பிள்ளை.

## ஜப்பானையும் மிஞ்சிவிடும்!

### கல்விமுறைபற்றி அதிகாரி கருத்து

வென்னப்புவா, வியாழன்

"ஆசியா முழுவதிலேயுமே ஜப்பான் தேசத்தில்தான் சிறந்த கல்விமுறை நிலவிவருகிறது. தேசியக் கல்விமுறை இலங்கையில் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டபின்னர் ஜப்பானிலும் பார்க்கச் சிறந்த கல்விமுறை இலங்கையில் நிலவிவரலாம்."

இவ்வாறு கல்வி இலாகாவின் உயர்தர உதவிக் காரியதரிசி டக்டர் ஆனந்தகுருகே குரான ரோமன் கத்தோலிக்க கலவன் பாடசாலைப் பெற்றோர் தினக் கொண்டாட்டத்தில் தலைமைதாங்கிப் பேசுகையில் கூறினர். டாக்டர் குருகே மேலும் கூறியதாவது:

"பொதுமக்கள் ஒத்துழைப்பார்களேயானல் தேசிய கல்விமுறையினல் அரசாங்கம் நல்ல விளைவுகளைக் காணமுடியும் அரசாங்கம் பள்ளிக்கூடங்களின் பொறுப்பைஏற்றுள்ளதாகையால், அது தனது கல்விக்கொள்கையைநிறைவேற்றுவதற்குப் பொதுமக்கள் அரசாங்கத்துடன் ஒத்துழைக்க வேண்டும். தேசிய கல்விமுறை பள்ளிக்கூடங்களிலுள்ள சமய போதனையைப் பாதிக்கமாட்டாது."

திருமதி சுஜாதா குருகே பரிசுகளை வழங்கினர்.


# ஒருபோதும் கிடைக்காத மிகச் சிக்கனமான பொஸ்

# BOSS

## மண்ணெண்ணெய் அடுப்புகள்



சமையல் அடுப்பு - 20U
—2 பர்னர்கள்
மத்தியில் எரிபொருள் தாங்கி உள்ள... சமைப்பதற்கென விசாலமான மேற்பு... இடவசதியுண்டு. போர்ஸிலேன் மே... புறம், கிரேட்ஸ் மற்றும் டிரம் புகை... போக்கிகள். கால் 2 கலன், கிளாஸ் எ... பொருள் தாங்கி. ஒரே துண்டு அ... புறமும், பின்புறமும். நிற்கும் மோ... உண்டு.

சமையல் அடுப்பு - 27U
—2 பர்னர்கள்
...ர்ஸிலேன் மேற்புறம், கிரேட்ஸ் மற்... டிரம் புகைப்போக்கிகள். 2 கா... ன். கிளாஸ் எரிபொருள் தாங்கி. ... துண்டு அடிப்புறமும் பின்புறமும் ...ரும் மோடல் உண்டு.

சமையல் அடுப்பு - 37U
—3பர்னர்கள்
போர்ஸிலேன் மேற்புறம், கிரேட்ஸ் மற்றும் டிரம் புகைபோக்கிகள். 2 காலன் கிளாஸ் எரிபொருள் தாங்கி. ஒரே துண்டு அடிப்புறமும் பின்புறமும். நிற்கும் மோடல் உண்டு.

பொஸ் புகை பிடிக்காது, நாற்றம் அடிக்காது, கரி படியாது, சுலபமான இயக்கம்.

விசாரணைகளுக்கு: CWE சி.டப்ளியூ.ஈ. 40, மக்கலம் ரோட், ஸி.டப்ளியூ.ஈ. கடை, மருதானை மற்றும் வெளியூர் டிப்போக்கள்.

E. W. 46

# "அணு சோதனையை நிறுத்தமாட்டேன்"

## வெளிநாட்டுத் தலைவர்களுக்கு குருஷ்சேவ் அறிவிப்பு!

மாஸ்கோ, அக். 28

**அணுசோதனையை நிறுத்தவேண்டுமென பலவெளி நாட்டுத் தலைவர்கள் விடுத்த வேண்டுகோளை ஏற்கமுடியாதென சோவியத் பிரதமர் திரு. குருஷ்சேவ் மறுத்துவிட்டார்.**

கானா அதிபர் டாக்டர் நிக்ருமா, ஜப்பானியப் பிரதமர், எதியோப்பிய மன்னர், பிரிட்டிஷ் தொழிற்கட்சித் தலைவர்கள், அமெரிக்க விஞ்ஞானி ஒருவர் ஆகியோர் பயங்கர அணு சோதனையை நிறுத்துமாறு திரு. குருஷ்சேவைவேண்டியிருந்தனர். ஆனால் இந்த விண்ணப்பங்களை நிராகரித்து திரு. குருஷ்சேவ் அவர்களுக்குப் பதில் அனுப்பியிருக்கிறார். ஜெர்மனிபற்றி மேற்கு நாடுகள் அனுஷ்டிக்கும் கொள்கை ரஷ்யாவுக்கு அபாயத்தை உண்டு பண்ணியிருப்பதாயும், எனவே இக்கட்டத்தில் ரஷ்யா அணு சோதனையை நிறுத்தமுடியாது என்றும் திரு. குருஷ்சேவ் தமது பதிலில் தெரிவித்துள்ளார்.

## யூகோ எழுத்தாளருக்கு நோபல் பரிசு

நியுயோர்க், அக். 26

1961-ம் வருடத்துக்கான இலக்கியத்துக்குரிய நோபல் பரிசு யூகோஸ்லேவிய எழுத்தாளரான ஐவோ இன்டிரிக் என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

---

## வவனியா எம். பி.க்கு கார் அன்பளிப்பு?

முள்ளியவளை, வெள்ளி

வவனியாப் பிரதிநிதி திரு. தா. சிவசிதம்பரத்துக்கு கார் ஒன்றை வாங்கி அன்பளிப்புச் செய்வதென வவனியாத் தொகுதியிலுள்ள பிரமுகர்கள் பலர் அடங்கிய மகாநாடொன்றில் தீர்மானிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அதற்குரியமுயற்சிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

## 5 கவர்னர்களுக்கு பதவி நீடிப்பு

புதுடில்லி, அக். 28

1962 ஏப்ரல் 15வ வரையில் தொடர்ந்து பதவியை வகிக்கும்படி ராஷ்டிரபதியின் பொறுப்புகளை வகித்துவரும் உபராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் ஐந்து ராஜ்ய கவர்னர்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறார். அதற்குள் தேர்தல்கள் முடிவடைந்து மத்திய சர்க்காரிலும் ராஜ்யங்களிலும் மந்திரி சபைகள் அமைக்கப்பட்டிருக்கும் உத்திரப் பிரதேசம் (டாக்டர் பி. ராமகிருஷ்ணராவ்), ராஜஸ்தான் (ஸ்ரீ குருமுக் நிகால் சிங்), மகாராஷ்டிரா (ஸ்ரீ. ஸ்ரீபிரகாசா), மேற்கு வங்காளம் (ஸ்ரீமதி. பத்மஜா நாயுடு), மைசூர் (மைசூர் மகாராஜா) ஆகியவர்களின் பதவிகாலம் இந்த வருஷத்துடன் முடிவடைகிறது. பொதுத் தேர்தல்கள் அடுத்து வருவதை முன்னிட்டு இடைக்காலத்தில் எந்த மாறுதலும் வேண்டாமென்பதற்காகவே இவர்களுடைய பதவிக்காலம் நீடிக்கப்படுகிறது.

---

## மீன்பிடித் தொழிலாளருக்கு இன்சூரன்ஸ் திட்டம்

கொழும்பு, வியாழன்

மீன்பிடித் தொழிலாளர்களுக்கான 'இன்சூரன்ஸ்' திட்டமொன்றை உருவாக்குவதற்கான சட்டம் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றது. கடலில் ஏற்படும் விபத்துக்களுக்குப் பாதுகாப்பாக இச்சட்டம் ஏற்படுத்தப்பட விருக்கிறது.

மீன்பிடி இலாகா அதிகாரிகளுடன் காணிவிவசாய நீர்ப்பாசன அமைச்சு, மீன்பிடித் தொழிலாளர்களது வாழ்க்கை நிலைபரங்கள்பற்றியும் அவர்களுக்கு ஏற்படக்கூடிய விபத்துக்கள்பற்றியும் ஆராய்ச்சி செய்து வருகிறது. மீன்பிடித் தொழிலாளருக்கான 'இன்சூரன்ஸ், திட்டம் தொழிலாளர் நிலைமைகளுக்கேற்ப அமைக்கப்படவிருக்கிறது. இத்திட்டத்தின் சட்ட மசோதாக்களை காணி விவசாய நீர்ப்பாசன இலாகா தயார்செய்கிறது.

மீன்பிடித் தொழிலாளருக்குக் கடலில் ஏற்படக்கூடிய விபத்துக்கள் பற்றிய விபரங்கள் திட்டத்தில் முக்கிய இடம் பெறும். தொழிலாளர் விபத்தினால் இறக்கநேரிட்டால் அவர் குடும்பத்தைப் பாதுகாப்பது இத்திட்டத்தின் முக்கிய நோக்கம்.

கடற்கரைத் தொகுதிகளைச் சேர்ந்த பார்லிமெண்ட் அங்கத்தவர்கள் மீன்பிடித்தொழிலாளருக்கு இப்படியான ஒரு பாதுகாப்புத் திட்டம் வேண்டுமெனப் பல தடவைகளாக வலியுறுத்தி அரசாங்கத்திடம் கேட்டதன்பேரில் இத்திட்டம் உருவாக இருக்கிறது.

---

## ஐ. நா. துணைக்காரியதரிசிகளின் உதவியுடன் கடமையாற்றுவேன்

### திரு. யூதாண்ட் அறிவிப்பு

நியூயோர்க், அக். 28

ஐ. நா. இடைக்காலத் தலைமைக் காரியதரிசி பதவிக்கு ரஷ்யா, அமெரிக்கா இருநாடுகளாலும் ஏற்கப்பட்ட திரு. யூதாண்ட், துணைக்காரியதரிசிகள் பற்றிய தேக்கநிலைக்கு தாம் ஒரு திட்டத்தை அறிவிக்கப்போவதாய்க் கூறினார். இத்திட்டத்தைத் தாம் இருவல்லரசுகளுக்கும் ஏற்கனவே தெரிவித்துவிட்டதாயும் அவர் குறிப்பிட்டார். தமது உயர்தர துணைக்காரியதரிசிகளின் ஆலோசனைகளுடன் கடமையாற்றத் தயாராயிருப்பதாக அவர் கூறியிருக்கிறாராம்.

## காலியில் மீன்பிடி துறைமுகம்

கொழும்பு, வெள்ளி

ரூ. 60 லட்சம் செலவில் காலியில் ஒரு மீன்பிடித் துறைமுகம் அமைக்கும் முயற்சியில் துறைமுகக் கமிஷன் இறங்கியுள்ளது.

---

## 5 அல்ஜீரியர்கள் பலி

பாரிஸ். அக். 28

பிரான்சில் 5 அல்ஜீரியர்களை பிரஞ்சுக்காரர்கள் சுட்டுக் கொன்றனர்.

## தென்னாபிரிக்காவின் உள்விவகாரத்தில் தலையிடாதீர்

### ஐ. நா. வில் அந்நாட்டுப் பிரதிநிதி பேச்சு

நியூயோர்க், அக். 28

ஐ. நா. அரசியல் கமிட்டியில் தென்னாபிரிக்காவின் இனத்துவேஷக் கொள்கைகளைப் பல நாடுகள் கண்டித்தன. அந்நாடு அனுஷ்டிக்கும் நிறவெறிக் கொள்கை ஐ. நா. சாஸனத்துக்கு முரண்பட்டதென்றும், எனவே ஐ. நாவில் இதர அங்கத்தினர்களுடன் சேர்ந்திருக்க அதற்கு உரிமைகிடையாதென்றும் பிரதிநிதிகள் விவாதித்தனர்.

ஆனால் தமதுஉள்நாட்டு விவகாரத்தில் தலையிட ஐ. நா. வுக்கு உரிமைகிடையாது என வழக்கம்போல் தென்னாபிரிக்க வெளிநாட்டு மந்திரி திரு. எரிக் லோ விவாதித்தார்.

இதற்கிடையில் தென்மேற்கு ஆபிரிக்காவைநிர்வகிக்க தென்னாபிரிக்காவுக்குத் தகுதியில்லை என்றும், அங்குள்ள சிவிலியன்களிடமிருந்து ஆயுதங்களைப் பறிக்கவேண்டுமென்றும் தென்மேற்கு ஆபிரிக்கா பற்றி ஐ,நா. நியமித்த கமிட்டி சிபார்சு செய்துள்ளது.

---

## 'வல்லமையற்ற அரசாங்கம்'

### படினசங்க அங்கத்தவர் கண்டனம்

"சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசாங்கம் நெடுநாள் நிலைத்திருக்கமாட்டாது. அதை விழுத்துவற்கு எதுவித சதித் திட்டமும் தேவையில்லை. தனது வல்லமையற்ற தன்மையால் அது தானகவே விழுந்து விடும்."

இவ்வாறு அம்பாறையில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் பேசுகையில் நகர சபை அங்கத்தவர்களில் ஒருவரானதிரு. ஆர் பிரேமதாச கூறினார். அவர் மேலும் கூறியதாவது:-

"பிரதமர் பொது மக்களைத் தியாகம் செய்யும்படி கேட்டுள்ளார். எம்மைத் தியாகம் செய்யும்படி கேட்டுக்கொண்டு கொண்டாட்டங்களுக்கென 90,000 ரூபாவையும், கார் வாங்குவதற்கு 30,000ரூபாவையும் மற்றைய வெளியூர்ப் பிரயாணங்களில் இன்னும் பெருந்தொகையான பணத்தையும் பிரதமர் தாம் செலவு செய்து வருகிறார்.

ஒரு தொழிலாளர் குடும்பத்துக்கான வரவு செலவுத் திட்டத்தை எமது பிரதமர் வரையறை செய்துள்ளார். இத்திட்டத்தின்படி தினமும் நாலரை ரூபாய் வருமானம் பெறும் 5 பேரைக் கொண்ட குடும்பமொன்று 79 சதத்தை மிச்சம் பிடிக்கலாம் என்கிறார். தமது வரவு செலவுத் திட்டத்தில் விறகுக்குப் பணம் ஒதுக்கப் பிரதமர் மறந்துவிட்டார், விறகில்லாமல் சமையல் போடலாம் என்று பிரதமர் எதிர்பார்க்கிறாரா என்று பொதுமக்கள் நான் போகும் இடங்களிலெல்லாம் கேட்கிறார்கள்.

## அபராதம் அல்லது ஒருமாத கடூழியம்

மாவிட்டபுரம், வெள்ளி

தனக்கு விதிக்கப்பட்ட அபராதத்தில் மிகுதிப்பணமாகிய ரூபா 30 யும் செலுத்துவதா அல்லது ஒருமாத கடும் தண்டனையை அனுபவிப்பதா என்ற ஓர் பிரச்சினை ஓர் குற்றவாளியைஎதிர் நோக்கியசம்பவம் மல்லாகம் நீதிமன்றத்தில் நிகழ்ந்தது.

இவ் வழக்கில் தொல்புரத்தைச் சேர்ந்த நன்னியன் பாலசிங்கம் என்பவர் மூளாயைச் சேர்ந்த மருதன் சின்னவன் என்பவரைக் கத்தியால் குத்தி காயம் உண்டு பண்ணியதாகச் சங்கானை பொலிசாரால் மல்லாகம் நீதிபதி வெஸ்லி. டி. தாமோதரம் முன்னிலையில் குற்றஞ்சாட்டப் பட்டிருந்தது.

எதிரியை குற்றவாளியாகக் கண்ட நீதிபதி அவரை ரூபா 50 அபராதம் செலுத்தும்படி கட்டளையிட்டிருந்தார்.

எதிரி தான் உடனடியாக ரூபா 20 அபராதம் செலுத்துவதாயும் வேறு ஒரு தவணையில் மிகுதிப் பணமாகிய ரூபா 30 யும் செலுத்துவதாயும்கூறி நீதிபதியிடம் தவணை பெற்றார்.

பாலசிங்கம் குறித்த தவணையில் மிகுதிப்பணத்தைச்செலுத்தத்தவறவே நீதவான் அவரை அட் பணத்தை உடனடியாகச் செலுத்துப்படியும்கட்டத் தவறினால் ஒருமாத கடும் சிறைக்கு செல்லும்படியும் கட்டளையிட்டார்.

---

புதுடில்லி, அக். 26

பிரபல அஸ்ஸாம் எழுத்தாளரான திரு. பர்வா இன்று தமது87-வது வயதில் காலமானார்.

## ஐந்து பேர்களடங்கிய விசாரணைக் கமிஷன்

### ஹமர்ஷீல்டின் மரணம் பற்றி ஐ. நா. நடவடிக்கை

நியூயோர்க், அக். 28

திரு. ஹமர்ஷீல்டின் மரணம் பற்றி 5 பிரபல தலைவர்கள் அடங்கிய ஒரு விசாரணைக் கமிஷனை நியமிக்கவேண்டுமென் இந்தியாவும், மற்றும் 9 நாடுகளும் கொண்டுவந்த பிரேரணையை ஐ. நா. பொதுச் சபை அங்கீகரித்தது. பிரேரணைக்குச் சாதகமாக 97 வாக்குகள் கிடைத்தன. 4 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை.

இந்தியப் பிரதிநிதி திரு. ஜா பேசுகையில் இக்கமிஷனுக்கு எல்லா நாடுகளும் முழு ஆதரவு அளிக்கவேண்டுமென வற்புறுத்தினர். 3 மாதங்களுக்குள் கமிஷன் தன் அறிக்கையைச் சமர்ப்பிக்கும் என எதிர் பார்க்கப்படுகிறது.

---

## கல்லூரியில் ஐ. நா. தினம்

காரைநகர், வெள்ளி

காரைநகர் இந்துக்கல்லூரி சரித்திர குடியியல் கழகத்தின் சார்பில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபன தினம் திரு. வி. யோகரத்தினத்தின் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் ஆசிரியர்கள் எம். இளையதம்பி, என். சபாரத்தினம் ச. சபாநடேசன். ஏ. நடராசா ஆகியோர் ஐ நா. ஸ்தாபனத்தைப்பற்றி விரிவுரைகள் நிகழ்த்தினர்.

## களனி டயர் தொழிற்சாலை

கொழும்பு, வெள்ளி

ரஷ்ய உதவியுடன் களனியில் அமைக்கப்படவிருக்கும் டயர் தொழிற்சாலைபற்றி மந்திரி திரு. மைத்திரிபாலசேன நாயக்கா நேற்று பார்லிமெண்டில் அறிவித்தார். தொழிற்சாலையின் முதல் கட்டத்தில் 140 லட்சம் ரூபாயும், 2-ம் கட்டத்தில் 240 லட்சம் ரூபாயும் வெளிநாட்டுச் செலவாணியில் மிச்சம் ஏற்படுமென்றும், முதல் கட்டத்தில் 550 பேருக்கும், 2-ம் கட்டத்தில் 660 பேருக்கும் வேலைகிடைக்குமென்றும் அவர் கூறினார்.

---

## வண்டினத்தால் தொல்லை

கிளிநொச்சி, வெள்ளி

சக்கரப்பாண்டியன் எனும் வண்டினத்தின் நடமாட்டம் இப்பொழுது இங்கு பெரும் தொல்லையை விளைவித்து வருகிறது. இந்த வண்டுகள் மக்களின் காதில் நுழைந்து அவர்களைப் பெரும் தொல்லைக்குள்ளாக்கிவிடுகிறது:

இந்த வண்டு நுழைந்ததால் இங்கு சிலர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட வேண்டியிருந்தது.

## ஈ. வே. ராவுக்கு தங்கக் கவசம்

திருச்சி, அக். 28

திராவிடக் கழகத் தலைவர் ஸ்ரீ ஈ. வே. ராமசாமி நாயக்கருக்கு திருச்சியின் தங்கத்தலைக் கவசம் பரிசாக அளிக்கப்பட்டது.

அவர் நகரில் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். அவரைப் பாராட்டும் வகையில் மாலையில் பொதுக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. ஸ்ரீமான்கள் டி. செங்கல்வராயன், இ. பி. மதுரம், எம். எல். ஏ. ஆகியோர் கூட்டத்தில் பேசினர்.

---

## முயற்சி வெற்றி

புதுடில்லி, அக். 26

ராஜஸ்தான் பாலைவனத்தில் நிலத்துக்கடியில் நீர் பெற்றுக் கொள்ளும் முயற்சி எதிர் பாராத அளவுக்கு வெற்றியளித்துள்ளதாகமந்திரி பாட்டில் தெரிவித்தார்.

## மணி வாக்கு

'எல்லாவற்றிலும் நல்ல அம்சத்தைக் காண முயல வேண்டும். அதுவே அன்பு மலர்ச்சிக்கு அறிகுறி.'

ஈழநாடு
EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு ஐப்பசி மீ 12 உ (28 10 61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone: 389.

## சங்கக் கடைகள் விசாரணைச் சபை

கொழும்பிலுள்ள கூட்டுறவுச்சங்கக்கடைகளுக்கு நேரில் சென்று, பொது மக்களுக்கு இருக்கும் சங்கடங்களையும் குறைகளையும் அறிய ஐந்து பேரடங்கிய விசாரணைச் சபையைக் கூட்டுறவு அபிவிருத்தி இலாகா நியமித்திருப்பது வரவேற்கத் தக்கது. கொழும்பில் மட்டுமின்றி, தீவின் மற்ற இடங்களிலும் சங்கக்கடைகள் விஷயமாக பொது மக்களுக்கு அதிக குறைகளுண்டு. ஆகவேமற்றைய பகுதிகளுக்கும் சென்று விசாரணை நடத்தக் கூட்டுறவு இலாகா ஒழுங்கு செய்வது அவசியமாகும்.

பங்கீட்டு அரிசி, அழுகல் கிழங்கு, உளுத்துப்புளுத்துப் போன தானியங்கள், பாடாவதி சரக்குகள் இவைதான் சங்கக்கடைகளில் கிடைப்பதாயும், மக்களுக்குத் தேவையான நல்ல சரக்குகள் அக்கடைகளில் கிடைப்பது குதிரைக் கொம்பென்றும் பொதுவாக புகார் உண்டு. அங்கு வரும் நல்ல சரக்குகள் கள்ள மார்க்கெட்டுக்குக் கைமாறிவிடுவதாயும் அக்கடைகளில் பல இரண்டுகால் பெருச்சாளிகள் புகுந்து சுரண்டல் வேலைகளை நடத்துவதாயும் சொல்லப்படுகின்றது. இவற்றையெல்லாம் நேரில் சென்று விசாரித்தால் தான் உண்மை வெளியாகவும், பொது மக்களின் குறைகள் நீங்கவும் வழிபிறக்கும்.

இப்போது மக்களுக்குத் தேவையான பல அத்தியாவசிய சரக்குகளையும் கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனமே அதிகமாக இறக்குமதி செய்ய உரிமை பெற்றுள்ளதாலும், சங்கங்கடைகள் மூலமே இச்சரக்குகள் விநியோகமாவதாலும், அக்கடைகள் சரிவர நடைபெறப் பார்த்துக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். வர்த்தகப் போட்டிகளும், சரக்குத் தட்டுப்பாடும் இருக்கையில் கள்ளமார்க்கெட் ஊழல்கள் தலைதூக்குவது இயற்கை. அதை முற்றாக ஒழிக்க முடியாவிட்டாலும், மேற்குறித்த விசாரணை மூலம் ஓரளவாவது நீக்கி, பொதுமக்களுக்குச் சற்றே கஷ்டநிவாரணம் அளிக்க இடமுண்டு.

## புகை பஸ்ஸுகள்

இலங்கை போக்குவரத்துச் சபையின் புதிய பஸ்ஸுகள் கூட தெருவில் ஓடுகையில் கரிப்புகையை விட்டுச் செல்லுவதாயும், அந்தப் பஸ்ஸுகள் சரிவரப் பராமரிக்கப்படவில்லை என்றும் இதனால் ரஸ்தாவில் செல்லும் மக்களின் சுகாதாரம் கெடுவதுடன், ரஸ்தா போக்குவரத்துக்கும் ஆபத்து ஏற்படுவதாயும், "ரிக்கார்ட்" என்ற மோட்டார் சங்கத்தின் சஞ்சிகை, தலையங்கத்தில் சரியாகக் கண்டித்துள்ளது. புதிய பஸ்ஸுகளே அப்படியென்றால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஓடும் பழைய ஓட்டை உடைசல் பஸ்ஸுகள் எவ்வளவு புகைமண்டலம் எழுப்புகிறதென்பதை விளக்கத் தேவையில்லை. துரதிருஷ்டவசமாக பஸ் விஷயத்தில் அரசியல் சிக்கல்கள் ஏற்பட்டு, இவ்விரு மாகாண மக்களுக்கும் பெரும் சங்கடங்களை அளித்து வருகின்றன. பொதுமக்களின் நன்மையைக் கருதி, இப்பிரச்சினையைச்சுமுகமாகச் சீக்கிரத்தில் தீர்த்து, பழைய பஸ்ஸுகளை அகற்றி புதிய பஸ்ஸுகளை விடுவதுடன், கரியபுகை மண்டலத்தைக் கிளப்பாமல் தடுக்கத் தக்க ஒழுங்குகளைச் செய்வது அவசியம்.

# ஸ்டாலின் அபிமானிகள் மீது நடவடிக்கை

## குருஷ்சேவை விரட்ட சதிசெய்தனராம்

மாஸ்கோ, அக். 28— சோவியத்தின் ஜனாதிபதியாக இருந்த மார்ஷல் வரோஷிலாவ், பிரதமர் பதவியை வகித்த மாலடோவ், மாலெங்காவ் உட்பட ஸ்டாலினது பழைய அபிமானிகள் குருஷ்சேவைப்பதவியிலிருந்துவிரட்டுவதற்குச் சதி செய்தார்கள் என்று பல விபரங்களுடன் கம்யூனிஸ்டு கட்சியின் காங்கிரஸில் திங்கட்கிழமையன்று ஸ்ரீ போலியான்ஸ்கி செய்த குற்றச்சாட்டுகளின் விவரங்கள் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

இம் மூவருடன் மாஜி உதவிப் பிரதமர் காகனோவிச், மாஜி அயல்நாட்டு மந்திரி ஷெபிலாவ் ஆகியோரும் சேர்ந்து சதி செய்தார்கள் என்று போலியான்ஸ்கியும், மத்தியக் கமிட்டி மெம்பர் இக்னியடாவும் புகார் செய்தனர்.

கண்டனத்துக்கு உள்ளான பழைய தலைவர்களின் செயல்களை அவர்கள் விவரிக்கையில், குருஷ்சேவ் அவ்வப்பொழுது குறுக்கிட்டு, அதிகப்படி தகவல்களையும் சில சமயம் திருத்தங்களையும் வழங்கினர்.

நிரபராதிகளான பலரை முக்கியமாக ராணுவ அதிகாரிகளை மார்ஷல் வரோஷிலாவ் சித்திரவதைக்குஉள்ளாக்கினர் என்று கூறப்பட்டது.

1957-ல் பிரதமர் பதவியிலிருந்து குருஷ்சேவை விரட்ட இவர்கள் சதி செய்தனர் என்றார் போலியான்ஸ்கி. போலியான்ஸ்கி சோவியத்திலுள்ள மிகப் பெரிய உறுப்பாகிய ரஷியக் குடியரசின் பிரதம மந்திரி.

குற்றச்சாட்டு நடவடிக்கைகளை மாஸ்கோ ரேடியோ ஒலிபரப்பியது.

மாஸ்கோ, அக். 25

மாஜி சோவியத் தலைவரான மாலன்காவும், மாலடோவும், ககானோவிச்சும் கம்யூனிஸ்டு கட்சியிலிருந்து வெளியேற்றப்படுவது நிச்சயம்என்று தோன்றியது.

கட்சி காங்கிரஸில் அவர்களைக் குறிப்பாக மேலிடமெம்பர்நிகலாய்ஷ் வெர்னிக் பலமாகத் தாக்கிப் பேசினர். பெரியார் செய்த குற்றங்களுடன் மாலடாவையும், மாலன்காவையும் அவர் சம்பந்தப்படுத்தினர்.

## 50. மாணவிகள் ஆசிரியை கிடையாது

தெரனியகலை, வெள்ளி

தெரனியகலை அரசாங்க கனிஷ்ட பாடசாலையிலுள்ள தமிழ்ப் பகுதியில், 50க்கு மேற்பட்ட மாணவிகள் பயின்றுவருகின்றனர். ஆனால் ஒரு ஆசிரியர் தானும் இங்கு கிடையாது.

இது சம்பந்தமாக தெகியோவிட்டை எம். பி. மூலமாக பெற்றோர் ஆசிரியர் சங்கம் கல்வி மந்திரியிடம் முன்னர் மகஜர் சமர்ப்பித்திருந்தது. ஆனால் இது வரை எது வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இப்பொழுது பெற்றோர், கல்வி மந்திரியிடம் தாமே நேரிற் சென்று முறையிட தீர்மானித்துள்ளனர்.

## அபிவிருத்தி வரிக்கு ஆட்சேபம்

கொழும்பு, வெள்ளி

தேசிய அபிவிருத்தி வரியை ஆட்சேபித்து இன்று சுமார் 200 அரசாங்க சேவை தொழிற் சங்கத்தினர் பிரதம மந்திரிக்கு தந்திச்செய்தி அனுப்புவார்கள்.

4 சதவீத அபிவிருத்தி வரி இன்றுதான் அறவிடப்படும் எனத் தெரிகிறது. இதனாலேயே இவர்கள் இன்று தமது ஆட்சேபங்களை அனுப்ப தீர்மானித்துள்ளனர்.

## ஐயாறன் எழுதுவது

எத்தனை கோடி இன்பம் வைத்தாய், எங்கள் இறைவா, இறைவா, இறைவா! என்று அமரகவிபாரதியார் பாடினரல்லவா?

சென்ற சில நாட்களாக இங்கு நடந்த பல நவராத்திரி கலை விழாக்களையும், பரத நாட்டிய இசைக் கச்சேரிகளையும் நேரில் பார்த்ததின் பயனாக, எனக்கு பாரதியாரின் அந்தப் பாடல்தான் ஞாபகம் வந்தது.

மொழி, பணம், குடி முதலிய பல பல தொல்லைகள் இருக்கின்றனவாம். என்றாலும் இதற்கிடையே பல இனிய அருங்கலை நிகழ்ச்சிகளும் காட்சிகளும், நம் கவலைகளை மறக்கச் செய்து, எவ்வளவோ நமக்கு இன்ப மூட்டி வருகின்றன. வளர்க நம் கலைகளும், இளம் கலைஞர்களும்!

* * *

சென்ற புதன், வியாழக்கிழமைகளில் யாழ்ப்பாண நகர மண்டபத்திலே ரஸிகர்களுக்கு நல்ல கலை விருந்துகள் கிடைத்தன. முதல் நாள் கலைமன்ற மாணவிகள் தனியாகவும் கோஷ்டியாகவும் சேர்ந்து பல நடனங்களை அழகாக ஆடி ரஸிகர்களை மகிழ்வித்தார்கள். ஒரு பிரபல கலைக் குடும்பத்தைச் சேர்ந்த மூன்று சகோதரிகளின் நட்டுவாங்கம் சிறப்பாக இருந்தது. கண்யமான குடும்பங்களைச் சேர்ந்தவர்கள், முன்வந்து பரத நாட்டியம் ஆடி, நட்டுவாங்கமும் செய்வதால் இந்தக் கலைக்கே புதிய அந்தஸ்தும் மதிப்பும் ஏற்பட்டுவருவதைப் பார்க்கிறோம்.

மறுநாள் வியாழக் கிழமை குமாரி திரிபுரசுந்தரி குமாரசாமி, தமது குருவான வழுவூராரின் நட்டுவாங்கத்துடன், உயரிய முறையில் பரதமாடி பலரது பாராட்டுகளையும் பெற்றார். பின்னணி, மேடை ஏற்பாடுகள் கன சச்சிதம்.

* * *

நாட்டியகலாகேசரி வழுவூர் ராமையாபிள்ளை, இடையிடையேபேசுகையில் சிலப்பதிகாரக் கதையொன்று சொன்னார். இந்திர சபையிலே ரம்பை, ஊர்வசி, திலோத்தமை முதலியவர்கள் நடனமாடுகிறார்கள். இந்திரன் மகன் ஜயந்தன், ஊர்வசியை காதல் கண்களுடன் பார்க்கின்றான். ஊர்வசியும் அப்படியே நோக்க, தாளம் பிசகிவிட்டது. அங்கிருந்த அகஸ்தியர் இதை அறிந்து சபித்ததாயும் இதனால் ஊர்வசி மாதவியாகப் பிறந்ததாயும் ஜயந்தனுக்கும் சாபம் கிடைத்ததாகவும் கூறி, பரத நாட்டியம் தெய்வீககலையென்றும், வேறுதகாத கருத்துக்கொண்டால் கலை பாழாகிவிடுமென்றும் எச்சரித்தார்.

தமிழ் நாட்டிலே கோவில்களில் பரத நாட்டியத்துக்குள்ள தடை நீங்குமா என்று வழுவூராரைக் கேட்டேன். நிலைமை பெரிதும் மாறிவிட்டதால், இனி தடை நீங்கலாமென்றும், மந்திரி பக்தவத்ஸலம் இது பற்றி சாதகமாக இருப்பதாயும் தெரிவித்தார் அவர். தமிழ் நாட்டு கோவில்களில் இக் கலை மீண்டும் இடம் பெறின் ஏழை மக்களும் கூட இதைக் கண்டு ரஸிக்க முடியலாம். தமிழ் நாடு வழி காட்டினால், ஈழம் அதைப் பின்பற்ற அதிக காலமாகாது.

* * *

நேருஜிக்கு வயது 70க்கு மேலாகியும் இன்னும் இளமை உற்சாகத்துடன் இருக்கும் ரகசியமென்ன தெரியுமா? "ஆப்கா பிரேம்" (உங்கள் அன்புதான்) என்று மூன்று முறை அவர் பம்பாயில் 15 ஆயிரம் சேவாதள தொண்டர்கள் அணிவகுப்பில் பல திக்குகளிலும் சுட்டிக்காட்டி தெரிவித்தார். அன்புக்குத்தான் எவ்வளவு சக்தி! கர ...

(5ம் பக்கம் பார்க்க)

## கைதியின் ரிட் மனு

சென்னை, அக். 28

திருச்சி மத்திய சிறையைச் சேர்ந்த வீரய்யன் என்னும் கைதி சார்பாகத் தாக்கல் செய்யப்பட்ட ஒரு ரிட் மனுவை ஹைகோர்ட் நீதிபதி ஸ்ரீ ஜி. ஆர். ஜகதீசன் அனுமதித்தார். சிறைச்சாலைச் சட்டத்தின் விதிகளின்படி நடந்துகொள்ளுமாறு திருச்சி மத்திய சிறைச் சூப்ரண்டுக்கு உத்தரவு பிறப்பிக்குமாறு அவர் தனது மனுவில் கேட்டுக்கொண்டிருந்தார்.

திருச்சி மத்திய சிறை சூப்ரண்டுக்கு நோட்டீஸ் பிறப்பிக்குமாறு நீதிபதி உத்தரவு பிறப்பித்தார்.

சிறையில் ஒரு சமயத்தில் 2010 கைதிகளே தங்க வசதி இருப்பதாகவும், செப்டம்பர் மாதத்தில் கைதிகளின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டிருப்பதாகவும், தற்பொழுது சராசரியாக நாளொன்றுக்கு 7000 கைதிகள் இருப்பதாகவும் ஆடு மாடுகளைப் போல அவர்கள் அடைத்துப்போடப்பட்டிருப்பதாகவும், மனுதாரர் தனது மனுவில் முறையிட்டுக் கொண்டிருக்கிறார். கிஸான் கிளர்ச்சி சம்பந்தமாக கொடைவாசலில் உதவி தாசில்தார் அலுவலகத்தின் முன்பு மறியல் செய்ததற்காக எதிரிக்கு நாகபட்டணம் சப்டிவிஷனல் மாஜிஸ்டிரேட் 2 மாதம் சிறைத் தண்டனை விதித்திருந்தார். நிலவுடமை உச்சவரம்பு மசோதாவின் சில ஷரத்துக்களை ஆட்சேபித்தே மேற்கூறிய கிஸான் கிளர்ச்சி நடைபெற்றது.

## இரத்தினக் கம்பளம்

# இலங்கை ஆசிரியன்

பதுமன்

அகில இலங்கை ஆசிரியர் சங்கம் 'தி சிலோன் டீச்சர்' ("இலங்கை ஆசிரியன்") என்ற ஆங்கில வெளியீடு ஒன்றினை ஒவ்வொரு மாதமும் வெளியிட்டு வருகின்றது. கல்வி உலகில் ஏற்பட்டு வரும் மாற்றங்களையும் ஆசிரியர்கள் அறிய வேண்டிய முக்கிய விஷயங்களையும் தாங்கி இம்மாத இதழ் ஆசிரியர்களுக்கு உபயோகமான முறையில் வெளியாகி வருகின்றது.

செப்டம்பர் மாத இதழ் ஒன்றினை பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டுள்ள அன்பர் ஒருவர் நேற்று முன்தினம் அனுப்பி வைத்திருந்தார். அதன் முகப்பில் வெளியாகிய படத்தைப் பார்த்தபோது எனக்கு அதிர்ச்சி ஏற்பட்டது.

ஒரு கரும்பலகை. அதன் முன்னால் ஆசிரியர் ஒருவர் தேசிய உடையில் நிற்கிறார். அவருக்கு காலிலும் கையிலும் விலங்கிடப்பெற்று வாயும் கட்டப்பட்டிருக்கிறது. இலங்கை ஆசிரியர்களுக்குச் சுதந்திரம் பறிக்கப்பட்டிருப்பதை இப்படம் எடுத்துக் காட்டுகின்றது. சுதந்திர இலங்கையில் ஆசிரியருக்கு இந்நிலை ஏற்பட்டிருப்பது கவலைக்கிடமானதே

ஆசிரியராகப் பணியாற்றி இன்று கல்வி மந்திரியாகப் பதவி வகிக்கும் ஜனாப் பதியுதீன் மாமூத் இதனைப் பார்த்து என்ன எண்ணுவாரோ?

'கட்டுண்டோம், பொறுத்திருப்போம், காலம் மாறும்' என்ற பாரதியாரின் அடிகளைத் தான் இப்படத்தைப் பார்த்ததும் பதுமனின் வாய் முணுமுணுத்தது.

### சோதனை காலம்

'சோதனை காலம்' என்ற தலைப்பில் இதே வெளியீட்டில் தீட்டப் பெற்றுள்ள கட்டுரை வேதனையின் வெப்பத்தை எடுத்துக் காட்டும் முறையில் அமைந்துள்ளது. அதில் ஒரு சிறு பகுதியை மாத்திரம் இங்கு தருகின்றேன்.

"மக்களால் விரும்பப்படும் அரசாங்கம் எதுவும் ஆசிரியர்களின் சுதந்திரத்தில் நேர்மையின்றித் தலையிடமாட்டாது. இந்திய லோக்சபையில் எதிர்க்கட்சித் தரப்பினர் ஒருவர் ஆசிரியர்களை அரசியல் துறையிலிருந்து தவிர்க்க முடியாதா என்று கேட்டதற்கு, இந்தியக் கல்வி மந்திரி அளித்த பதில் வருமாறு: 'விசுவாச முள்ள பெருந் தொகையான மக்கள் பகுதியொன்று நாட்டுக்குச் செய்யக் கூடிய தொண்டுகளை முறியடிக்க எமது அரசாங்கம் விரும்பவில்லை."

விருத்தியடைந்துவரும் இலங்கை போன்ற ஒரு நாட்டுக்கு ஆசிரியர்களின் கருத்துக்கள் மிக அவசியமென்பதைப் பதுமன் சொல்லி மற்றவர்கள் அறியவேண்டியதில்லை.

### சிங்கள ஆசிரியர் கவலை

வாய்க்கு ருசியான உணவோ, அல்லது பொழுது போக்குவதற்கு உகந்த இடமோ கிடைப்பது அபூர்வமாய் இருப்பதாக மூதூர் பகுதியிலுள்ள பள்ளிக்கூடங்களில் கல்வி பயிற்றும் சிங்கள ஆசிரியர்கள் சிலர் புகார் செய்துள்ளனர்.

மூதூரில் முஸ்லிம் மக்கள் அதிக தொகையினராக வாழ்வதால் சிங்கள முறையில் தயார் செய்யப்படும் உணவு வகைகள் கிடைப்பதில்லையென்பது இச் சிங்களச் சகோதரர்களின் முறையீடு. ஓய்வு நேரங்களைத்தானும் கழிப்பதற்கு அங்குள்ள சமூக அமைப்புத் தமக்கு ஒத்துவருவதில்லையெனவும் சிங்கள ஆசிரியர்கள் கவலையுறுகின்றனர்.

பள்ளிக்கூடங்களிற் சிங்களம் பயிற்றுவதற்கும் போதியளவு நேரம் ஒதுக்கப்படவில்லையாம். இதனால் தாம் நல்ல முறையில் சிங்களம் பயிற்ற முடியாதிருப்பதாகவும் அவர்கள் கல்விப் பகுதிக்குத் தெரிவித்திருக்கின்றனராம்.

சிங்கள ஆசிரியர்களே, கவலை வேண்டாம். எல்லோருக்குமே

(5ம் பக்கம் பார்க்க)

# கத்தியால் வெட்டிக் கொலை செய்ய முயன்றதாய் வழக்கு

## விசாரணை ஒத்திவைப்பு

தெல்லிப்பழை, வெள்ளி

புத்தூர் மேற்கு வாசியான பெரியான் சிதம்பரப்பிள்ளை என்பவரை உடுவிலில் வைத்துக் கத்தியால் வெட்டிக் கொலை செய்ய எத்தனித்ததாக உடுவில் வாசியான வயிரவன் பாலன் என்பவர்மீது சுன்னுகம் பொலிஸாரால் குற்றஞ்சாட்டி மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி டி. தாமோதரம் முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு, விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

உடுவில் வாசியான கதிரேசு கந்தையா என்பவர் சாட்சியமளித்தார். அவர் சாட்சியத்தில் கூறியதாவது:-

எனக்கு வழக்காளியைக் கடந்த சுமார் பத்து மாதங்களாகத் தெரியும். நான் அவரிடம் கொடுக்கல் வாங்கல் செய்துவருகிறேன். இந்த வழக்கின் எதிரி எனது கிராமத்தைச் சேர்ந்தவர் அவர் எனக்கு உறவினர். எதிரி வழக்காளிக்கு ருபாய் 280 கொடுக்க வேண்டியிருப்பது எனக்குத் தெரியும். சம்பவம் நடைபெற்ற தினத் (கடந்த ஆகஸ்ட் மாதம் 17-ம் திகதி) திற்குப் பத்து நாட்கள் முந்தி வழக்காளி தனது பணத்தைத் தருமாறு எதிரியைக் கேட்டார். அப்போது இருவருக்குமிடையே வாக்குவாதம் ஏற்பட்டது. அத்தருணம் சின்னவி வைத்திலிங்கம் என்பவர் தலையிட்டு எதிரியின் கடனைத் தான் தருவதாக வழக்காளிக்கு வாக்குறுதியளித்தார்.

சம்பவம் நடைபெற்ற முதலிரவு எதிரியை வயித்திலிங்கம் வீட்டில் சந்தித்தேன். பின் வழக்காளியை எனது வீட்டிற்கு அழைத்துச் சென்றேன். அங்கு அவர் சாப்பிட்டு விட்டு முற்றத்தில் போட்டிருந்த வாங்கில் படுத்துறங்கினுர். நான் விருந்தையில் படுத்துறங்கினேன். அன்றிரவு சுமார் 1-30 மணியளவில் 'யாரோ என்னை வெட்டிப்போட்டான்' என்று வழக்காளி சத்தமிட்டார். நான் தூக்கம் கலைந்து எழும்பினேன். டோர்ச்வெளிச்சம் கொண்டு பார்த்தபோது எதிரியை அடையாளம் கண்டேன். எதிரியை நான் பின் தொடர்ந்து சென்றபோது அவர் எனது வளவின் வேலிக்கூடாக நுழைந்து வெளியேறினுர். நான் காயம் பட்ட வழக்காளியின் காயங்களுக்குச் சீலைத்துண்டுகளாற் சுற்றிக் காரில் ஏற்றிப் பொலிஸ் நிலயத்திற்குக் கொண்டு சென்றேன்."

காங்கேசன்துறை அரசினர் வைத்தியசாலை உதவி அதிகாரி திரு. எஸ். இராஜசூரியர் சாட்சியமளிக்கையில் வழக்காளியின் கையிலிருந்த காயங்கள் படுகாயங்களாக இருந்தன. அவர் ஆறு மணித்தியாலம் அபாயகரமான நிலையில் இருந்திருக்கிறுர் என்று தெரிவித்தார். உடுவில் வாசியான கந்தையாவின் மனைவி சின்னுச்சி சாட்சியமளித்த பின்னர் நீதிபதி மேல் விசாரணையை அடுத்த மாதம் 2-ம் திகதிவரை ஒத்தி வைத்தார்.

சுன்னுகம் பொலிஸ் நிலைய இன்ஸ்பெக்டர் திரு. கே. செபமாலையின் உதவியுடன் திரு. என். தம்பிரத்தினம் வழக்கை நடத்தினுர்.

திரு. வ. செல்லத்துரையின் அனுசரணையுடன் திரு. ஆர். ஆர். கண்ணுத்துரை எதிரி தரப்பில் ஆஜரானுர்.

## தொல்புரத்தில் சமய வகுப்பு

தொல்புரம், வெள்ளி

தொல்புரம் மத்திய சன சமூக நிலையத்தின் ஆதரவில் தொல்புரம் அ. மி. பாடசாலை மண்டபத்தில் பிரதி வெள்ளிக்கிழமைகளில் நடக்கும் சமய வகுப்பு கடந்த வெள்ளிக்கிழமை சின்னத்துரை ஆசிரியர் தலைமையில் நடைபெற்றது.

இச்சமய வகுப்பில் 46 மாணவர்களும், 38 மாணவிகளும், 29 பெற்றேர்களும் பங்கு பற்றினர்.

---

## ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

செலவில்லாவிடினும் இந்த அன்புக்குத்தான் உலகில் எவ்வளவு பஞ்சம்!

* * *

"புதுமை இலக்கியம்" என்ற இலக்கிய சஞ்சிகையின் புதிய வெளியீட்டை ஓர் இலக்கிய அன்பர் நேற்று கலை கொணர்ந்தார். விலை 25 சதம்தான். புது இலக்கியங்களைப் படிக்க முடியாதிருக்கும் எனக்கு, இவற்றின் போக்கை ஓரளவு தெரிந்துகொள்ள இது பயன்பட்டது!

# வெளிநாட்டு பட்டதாரிகள் சங்கம் அங்குரார்ப்பணம்

## கல்வி மந்திரியைப் பேட்டி காண முடிவு

யாழ்ப்பாணம், சனி

வெளிநாட்டுப் பட்டதாரிகள் சங்கமொன்று யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

தங்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஐந்து அங்கத்தவர்களைக் கொண்ட தூது கோஷ்டியொன்று கல்வி மந்திரியைப் பேட்டிகாண்பதென்ற தீர்மானமும் இக்கூட்டத்தில் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டது.

பின்வருவோர் சங்க நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்: திரு. எஸ். திருநாவுக்கரசு, உப - தலைவர்: செல்வி பாலராணி அண்ணமலை, பொருளாளர்: திரு. கே. பாலசுந்தரம், செயலாளர்: திரு. வி. என். செல்லத்துரை, உப-செயலாளர்: திரு. ஆ. பொன்னையா. அறுவர் கொண்ட செயற்குழு ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

---

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கும், ஐயனுர்கோவிலடி விளையாட்டுச் சங்கத்துக்குமிடையே நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் ஐயனுர் கோவிலடி வீரர் 3-2 கோல்களால் வெற்றி பெற்றனர்.

---

## இரத்தினக் கம்பளம்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

இப்போது கிரகம் போதாது தான்.

### தலையணையின் கீழ்..

சிலர் தமது தலையணையின் கீழ் புகையிலை வைத்திருப்பார்கள்; வேறு சிலர் வெற்றிலை பாக்கு வைத்திருப்பார்கள். கொஞ்சம் வயது முதிர்ந்தவர்கள் திருநீற்றுப் பை வைத்திருப்பார்கள். விழித்தெழுந்ததும் 'சிவ சிவ' என்று இறைவனின் திருநாமத்தை உச்சரித்து, திருநீற்றை அணிவார்கள்.

ஆனல் இக் காலத்து இளைஞர்களின் தலையணையின் கீழ் சினிமா புத்தகங்களே கிடக்கின்றனவென்று திருக்கோவிலில் நடைபெற்ற கூட்டுப் பிரார்த்தனையின் போது ஆசிரியர் ஒருவர் கூறியிருக்கின்ருர்!

அந்தக் காலத்தில் இறைவனின் பெயர்களைத் நமது பிள்ளைகளுக்குச் சூட்டினுர்கள். இந்தக் காலத்தில் சினிமா நட்சத்திரங்களின் பெயர்களை அல்லவா சூட்டுகின்ருர்கள். என்ன ஆச்சரியம்!

# அதிகாரிகளைத் தடைசெய்து காயம்விளைவித்ததாகவழக்கு

## இருவருக்கு சிறைத்தண்டனை; மூவர் விடுதலை

### தீர்ப்பை எதிர்த்து இருவரும் அப்பீல் செய்கின்றனர்

யாழ்ப்பாணம், சனி

சட்டவிரோதமாகக் கூட்டம் கூடியதாகவும் அரசாங்க உத்யோகத்தர் ஒருவரை சட்டபூர்வமான கடமையிலிருந்து தடை செய்ததாகவும், காங்கேசன்துறைப் பொலிசைச் சேர்ந்த சப் இன்ஸ்பெக்டர் திரு. ஏ. நல்லையா, பொலிஸ் கான்ஸ்டபிள்களான யூ. ஜி. உபசேனு, டி. ஜி. ஈ. விக்கிரம சுந்தரா ஆகியோருக்குக் காயம் விளைவித்ததாகவும் குற்றஞ்சாட்டி மயிலிட்டியைச் சேர்ந்த (1) கந்தன் வெள்ளையன் (2) கட்டையன் சின்னன், (3) கணபதி பொன்னையா, (4) சினனத்தம்பி கந்தையன், (5) வயிரவன் குழந்தையன் ஆகியோர்மீது யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு மாவட்ட நீதிபதி திரு. என். கிருஷ்ணதாசன் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது.

முடிக்குரிய நியாயவாதி திரு. டி. முத்துசுவாமிப்பிள்ளை வழக்கை நடத்தினுர்.

திரு. கே. வி. எஸ். சண்முகநாதன் திரு. எஸ். தம்பிரத்தினத்தின் அனுசரணையுடன் முதலாம், இரண்டாம், மூன்ரும், நாலாம் எதிரிகள் சார்பில் வாதாடினுர்.

திரு. பிரின்ஸ் இராசேந்திரா ஐந்தாம் எதிரியின் சார்பில் ஆஜராயிருந்தார்.

விசாரணை முடிவில் முதலாம் இரண்டாம் எதிரிகள் சட்டபூர்வமான கடமையிலிருந்து தடைசெய்ததற்கு குற்றவாளிகள் என்றும், மூன்ரும் நான்காம் ஐந்தாம் எதிரிகள் குற்றவாளிகள் அல்லவென்றும் காணப்பட்டது.

முதலாம் எதிரிக்கு 6 மாதச் சிறைத் தண்டனையும் இரண்டாம் எதிரிக்கு 9 மாதச்சிறை தண்டனையும் விதித்து மூன்யம் நாலாம் ஐந்தாம் எதிரிகளுக்கு மேலான வழக்கைத் தள்ளுபடி செய்து அவர்களையும் விடுதலை செய்து நீதிபதி தீர்ப்பளித்தார்.

இத்தீர்ப்பை எதிர்த்து முதலாம் இரண்டாம் எதிரிகள் அப்பீல் செய்கின்றனர்.

---

கொழும்பு, வெள்ளி

1962-ம் ஆண்டில் 6500 டன் இலங்கை ரப்பரை போலந்து வாங்கவிருக்கிறது. இது சம்பந்தமான ஒப்பந்தத்தில் நேற்று இரு நாடுகளும் கைச்சாத்திட்டன.

# தொழில் முகாமை சென்று பாரீர்!

## சுதேச அபிவிருத்திச் சங்கம் வேண்டுகோள்

கொழும்பு, வெள்ளி

"தொழில் முகாம்களில் சேர்ந்து தொழில் செய்வதால் நாட்டிற்கு நல்ல சேவைசெய்ய முடியும். அரசாங்க சேவையிலும் மற்றும் இடங்களிலும் கடமையாற்றுபவர்கள் தொழில் முகாம்களுக்குச் சென்று சேவை செய்யின் இளைஞர்களுக்கு வழிகாட்டியாக இருக்கும்".

இவ்வாறு சுயதேச அபிவிருத்திச் சங்கம் விடுத்திருக்கும் வேண்டுகோளில் குறிப்பிட்டுள்ளது. அதில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:-

இத்தாபனம் ஓமந்தையில் நிறுவி, பாலமோட்டை என்ற இடத்தில், ஒரு தொழில் முகாமைத் தொடங்கியிருக்கிறது. இத் தொழில் முகாமில், தமிழ் பேசும் மக்களின் பொருளாதார அபிவிருத்தியில் ஆர்வமும் உணர்ச்சியும் உள்ள அன்பர்கள் யாவரும், தங்களுக்கு வசதியான நாட்களில் அங்கு சென்று, பெருமை சிறுமை பாராட்டாது, "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற பெரு நோக்கத்தைக் கொண்டு சேவை செய்யலாம். பிறதேசங்களில் இவை போன்ற இயக்கங்கள், சிறிதுஞ் சலியாது பொருளாதாரத்தை விருத்தி பண்ணுவதையே உயரிய ஒரே நோக்கமாகக் கொண்டு, செயலாற்றி மக்கள் வறுமையைப் பறக்கடிக்கின்றன.

இந் நாட்டில் நாமும் எமது வருங்காலச் சந்ததியாரும், சுதந்திரமாக வாழவேண்டுமானல், சுயநலம் சிறிதும் அற்ற முறையில், நாட்டினபிவிருத்திக்காக உழைக்க முன்வருதல் வேண்டும். தொழில் முகாமில் சேர்ந்து சேவை செய்ய விரும்புவோர் எந்தத் திகதி தொடக்கம் எந்தத் திகதி வரையும் சேவை செய்ய முடியும் என்பதை எங்களுக்கு அறிவித்தால், அதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்வோம். அரசாங்க சேவையிலும் மற்றும் இடங்களிலும் கடமையாற்றும் பலர்கள், இத்தொழில் முகாமுக்குச் சென்று, சேவைசெய்யின், நம் இளைஞர்களும் இவ்வியக்கத்தில் சேருதற்கு, உணர்ச்சியையும் விருப்பத்தையும் உண்டாக்குமென்பது திண்ணம்.

---

## பிலிப்பைன் செல்வார்கள்

கொழும்பு, வெள்ளி

யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி ஸ்தாபனத்தின் உதவி கமிஷனர் திரு. வி. கனகசபையும் அனுராதபுரம் கூட்டுறவு அபிவிருத்தி ஸ்தாபனத்தின் உதவி கமிஷனர் திரு. லயனல் குணவர்த்தனவும் பிலிப்பைனில் நடைபெறும் 5-வது சர்வதேச கூட்டுறவு பயிற்சி மகாநாட்டில் இலங்கையின் பிரதிநிதிகளாகக் கலந்து கொள்வார்கள்.

திரு. கனகசபை ஜப்பான்' காங்காங், சிங்கப்பூர், இந்தோனீஷியா ஆகிய தேசங்களிலுள்ள கூட்டுறவு இயக்கங்கள் பற்றியும் அறிவார்.

# 'குடும்பத்தகராறுகாரணமாய் தற்கொலை செய்கிறேன்'

## லூர்தம்மா எழுதிய கடிதத்தில் இருந்ததாய் சாட்சியம்

மாவிட்டபுரம், வியாழன்

யாழ்ப்பாணத்திலுள்ள கொய்யாத்தோட்டம் என்னும் கிராமத்தைச் சேர்ந்தவரும் இரண்டு பிள்ளைகளுக்குத் தாயுமாகிய கனகரத்தினம் லூர்தம்மா என்னும் இளம் பெண் காங்கேசன்துறை கடலினுள் நேற்று (புதன்) விழுந்து தற்கொலை செய்யமுயன்றதாகக் குற்றம் சாட்டி காங்கேசன்துறைப் பொலிசாரால் மல்லாகம் நீதிமன்றத்தில் இன்று தொடரப்பட்ட வழக்கில், அவரைக் காப்பாற்றிய இராணுவ வீரர்களில் ஒருவரான எச். எஸ். ஜெயவிக்கிரமா என்பவரின் சாட்சியத்தை மல்லாகம் நீதிபதி பதிவு செய்தார்.

ஜெயவிக்கிரமா தமது சாட்சியத்தில், தான்நேற்று நண்பகல் அபயசோமா என்னும் சக இராணுவ வீரருடன் தமது முகாமில் இருந்ததாகவும், அச் சமயம் கடற்கரைப் பக்கமாக ஒரு பெண் செல்வதைத் தாங்கள் கண்டதாகவும், அப் பெண் நீர்பக்கம் திரும்பி கடலினுள் இருக்கும் கற்களுக்குமேல் நடந்து சென்றுகொண்டிருந்ததாயும், திடீரென அப் பெண் கடலினுள் பாய்ந்ததாகவும், இதைத்தாங்கள் பார்த்துக்கொண்டிருந்துவிட்டு தங்கள் தலைமை அதிகாரிக்கு அறிவித்தபின் தான் அபயசோமா என்ற வீரரையும் அழைத்துக்கொண்டு கடலை நோக்கி ஓடியதாயும் கூறினுர்.

அவர் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் "யாரோ ஓர் பெண் கடலினுள் மூழ்கினுர்" எனக் கத்திக்கொண்டே அப் பெண்ணை நோக்கி நான் ஓடினேன். அபயசோமா என்னைப்பின் தொடர்ந்தார். அவ் இளம்பெண் கடலினுள் மூழ்கிக்கொண்டிருந்த சமயம் நாங்கள் அவரைக் காப்பாற்றி கரை சேர்த்தோம். அப் பெண் அச்சமயம் அறிவை இழக்கவில்லை. அவர் நான்கு நிமிடங்கள் வரை நிலத்தில் வளர்த்தப்பட்டார் பின்னர் அவர் தாஞகவே எழும்பி நடந்தார். நாங்கள் லூர்தம்மாவை எமது முகாமிற்கு அழைத்துச் சென்ரேம்".

காங்கேசன்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் கே. துரைசிங்கம் சாட்சியமளிக்கையில், தங்களுக்குக் கிடைத்த தகவலின் பேரில் தாங்கள் காங்கேசன்துறையிலுள்ள இராணுவ முகாமிற்கு விரைந்து சென்று அங்குள்ள அதிகாரியிடம் இருந்து லூர்தம்மாவைப்பொறுப்பேற்றதாகக் கூறினுர்.

லூர்தம்மாவால் எழுதப்பட்ட கடிதம் ஒன்றையும் திரு. துரைசிங்கம் கோர்ட்டில் சமர்பித்தார். அக் கடிதத்தில் தான் குடும்பத் தகராறின் காரணமாகவே தற்கொலை செய்வதாயும் தனது உடம்பில் பிரேதபரிசோதனை நடத்த வேண்டாமெனவும் கோரியிருந்தார்.

லூர்தம்மா தான் குற்றவாளியல்லயெனக் கூறவேமல்லாகம் நீதிபதிவெஸ்லி. டி. தாமோதரம் விசாரணையைடிசம்பர் 8-ம் தேதிக்கு ஒத்திவைத்து அதுவரை லூர்தம்மாவை யாழ்ப்பாணம் ரட்சண்யசேவை ஸ்தாபனத்தில் வைக்கும்படி உத்தரவிட்டார்.



# மாணவர் மலர்



## விஞ்ஞானிகள் சாதனை

நா. சு. வயித்திலிங்கம்

வெண்ணிலவு குழந்தைகளுக்கு குதூகலம் தருவது. கவிஞர்களுக்கு கவியூற்று. அது கடந்த சில ஆண்டுகளாக விஞ்ஞானிகளின் விழுப் பொருளாய் விளங்கி நிற்கிறது. அவ் வெண்ணிலவை எட்டிப் பிடிக்கவேண்டுமென்று எண்ணற்ற விஞ்ஞானிகள் கனவு கண்டனர். அத்தகைய விஞ்ஞானிகளின் கனவும் நனவாகிவிட்டது. சந்திரனை எட்டிப் பிடிக்கும் போட்டியில் அமெரிக்க விஞ்ஞானிகளும் ரஷ்ய விஞ்ஞானிகளும் முன்னிலையில் நிற்கின்றனர்.

ரஷ்ய விஞ்ஞானிகள் விடா முயற்சியின் பயனாக வான வெளி "ரொக்கற்" ஒன்று சந்திர மண்டலத்தை எட்டிப் பிடித்து விட்டது. பூமிக்கும் சந்திரனுக்கும் இடையே உள்ள தூரம் இரண்டரைலட்சம் மைல். இவ்வளவு தூரத்தையும் 34 மணி நேரத்தில் கடந்து முட்டியது ரஷ்ய "ரொக்கட்". அதுமட்டுமா, ரஷ்ய தேசத்துச் சின்னத்தையும் கொண்டு போய் வைத்துள்ளது. உலகத்து விஞ்ஞானிகள் எல்லோரும் ரஷ்ய விஞ்ஞானிகளின் சாதனையை வாயாரப் புகழ்கின்றனர்.

பொதுவாக மனிதனின் ஆக்க சக்திக்கும் ரஷ்யரின் திறமைக்கும் இச் சாதனை ஓர் உதாரணமாகும். சந்திர மண்டலத்துக்கு மனிதன் அடி எடுத்து வைக்கும் காலம் தூரத்தில் இல்லை. நமது வாழ் நாளில் ஒரு வேளை நாம் சந்திர மண்டலத்துக்கு உல்லாசமாகச் சென்று பொழுது போக்கிவிட்டு திரும்பி வந்தாலும் வருவோம். அன்று அமரகவி பாரதி, "காற்றில் ஏறியவ் விண்ணையும் சாடுவோம்" என்று கனவு கண்டான் அக் கனவு பலித்து விட்டது. கிரகங்கள் மனிதனின் தலை விதியை ஆட்டி வைத்த காலம் மலையேறி விட்டது. இன்று மனித குலம் முயற்சியினால் கிரகங்களைத் துரத்திச் சென்று பிடிக்கின்றது.

## ஜெர்மன் விஞ்ஞானி கார்ல் ருயிஸ்பர்க் நூற்றாண்டு விழா

ஜெர்மன் ரசாயனத் தொழிலுடன் சம்பந்தப்பட்ட பிரபல விஞ்ஞானி கார்ல் ருயிஸ்பர்க்கின் நூற்றாண்டு ஜனன விழா மேற்கு ஜெர்மனியில் கொண்டாடப்பட்டது இவர் பெயரால் ஒரு ஸ்தாபனமே நடைபெற்று வருகிறது. இந்த ஸ்தாபனம் தொழில் நுட்பப் பயிற்சி அளிப்பதில் பெரும் சேவை செய்து வருகிறது.

கார்ல் ருயிஸ்பர்க் ஒரு கைவினைஞரின் மகன். அவருடைய பெற்றோர் மிக எளிய வாழ்க்கையை நடத்தியவர்கள். மிகவும் கஷ்டப்பட்டு தங்கள் மகனைப் படிக்க வைத்து தொழில் நுட்பப் பயிற்சியையும் அளித்தனர். ருயிஸ்பர்க்கும் நன்றாகக் கல்வி பயின்று ரசாயனப் பேராசிரியரானார். பேயர் கம்பெனியில் ஒரு தொழிலாளியாக சேர்ந்த பொழுது அவருக்கு வயது 20தான்.

ருயிஸ்பர்க், விஞ்ஞானி, தொழில் முதலாளி என்பதுடன் தொழிலை அபிவிருத்தி செய்யும் நுணுக்கமும் நன்கு தெரிந்தவர். இவருடைய முயற்சியின் காரணமாகவே 1925ல் அகில ஜெர்மன் சாயப் பொருள் உற்பத்தியாளர் ஸ்தாபனம் அமைக்கப்பட்டது.

அவருடையவிஞ்ஞான வெளியீடுகள் அவர் ஒரு சிறந்த விஞ்ஞானி என்பதை உலகிற்கு எடுத்துக் காட்டியது. அவர் செய்த பெரும் சேவை இளைஞர்களுக்கு தொழில் நுட்ப பயிற்சி அளித்ததேயாகும். 1928ல் அவர் பல ஜெர்மன் இளைஞர்களுக்கு தொழில் நுட்பப் பயிற்சி பெறுவதற்கு உபகாரச் சம்பள ஏற்பாட்டை ஆரம்பித்தார். இத்தகைய இளைஞர்களுக்கு பண உதவி அளிப்பதற்கென்றே ஒரு ஸ்தாபனம் இவருடைய முயற்சியால் ஏற்படுத்தப்பட்டது.

ஒரு சர்வதேச விடுதியைஏற்படுத்த அவர் நிதி உதவி அளித்தார். அவருக்கு அளிக்கப்பட்ட கௌரவங்கள் விருதுகளிலிருந்து அவருடைய சேவையை உலகினர் நன்கு உணர்ந்தனர் என்பது வெளிப்படுகிறது. ருயிஸ்பர்க் 1935ல் காலமானர்.

## சீன மாணவர்களின் தமிழ் ஆர்வம்

மலாயா பல்கலைக் கழகத்தில் சீன மாணவர்களும் மலாயா மாணவர்களும் மொத்தம் 70 பேர் தமிழ் மொழி பயின்று வருகின்றனர்.

இத்தகவலை மலாயா பல்கலைக் கழகத்தின் தமிழ்ப் பேராசிரியர் தனிநாயக அடிகளார் தெரிவித்தார்.

இம்மாணவர்கள் தமிழ் இலக்கியத்தில் நல்ல ஆர்வம் காட்டுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## பயிலும் போதே பணமும் தேடலாம்

கொழும்பு, வெள்ளி மாணவர்கள் கல்விகற்கும் பொழுது தமக்குத் தேவைப் படும் சிறு தொகைப்பணத்தை தாமே தேடிக்கொள்ளக்கூடிய வகையில் வழி செய்வதற்கு விவசாய காணி நீர்ப்பாசன மந்திரி ஆலோசனை செய்து வருகிறார்.

இந்தத் திட்டம் திரு. பி. மகாதேவாவினால் கொண்டுவரப்பட்டது.

இந்தத் திட்டத்தின்படி பல்கலைக் கழக மாணவர்களும் சிரேஷ்ட பாடசாலைகளில் பயிலும் மாணவர்களும் பால்சபையால் நடாத்தப்படும் விற்பனை நிலையங்களில் மீன் பாக்கட்டுகள் விற்பனை செய்வதற்கு நியமிக்கப்பட்டால், அதில் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு அவர்கள் தமக்குத் தேவையான புத்தகங்கள் முதலிய பொருள்களை வாங்கிக்கொள்ளலாம் எனக் கருதப்படுகிறது.

பம்பாய் நகரில் மாணவர்கள் இது போன்ற தொழில் புரிந்து பாடசாலைக்குத் தேவையான பொருள்களை வாங்கிக் கொள்கிறார்களாம்.

## அறிவுச்செல்வம்

### விசையும்வேகமும்

★நெல் மூட்டைகள் ஏற்றப்பட்ட ஒரு லாரியும், பஞ்சு மூட்டைகள் ஏற்றப்பட்ட மற்றொரு லாரியும் பழுதுபட்ட காரணத்தால் ஒரு சாலையில் நின்றுவிடுகின்றன. வண்டியை ஓரமாக நிறுத்துவதற்கு அதைத் தள்ளும் பொருட்டு. டிரைவர் பத்துக் கூலியாட்களை அமர்த்துகிறார். நெல் மூட்டைகள் ஏற்றப்பட்ட லாரியை அந்தப் பத்து ஆட்களும் மிகவும் சிரமப்பட்டுத் தள்ளுகிறார்கள். ஆனால் பஞ்சு மூட்டைகள் ஏற்றப்பட்ட லாரியை இரண்டே இரண்டு பேர் தள்ளிவிடுகிறார்கள். இதன் காரணத்தை எல்லாருமே அறிந்திருப்பார்கள். இந்த நிகழ்ச்சியில் பொதிந்திருக்கும் உண்மை தான் விஞ்ஞானி நியூட்டனின் இரண்டாவது இயக்க விதியாகும். இதை விரிவாகக் கூறினால், கனமான லாரியைத் தள்ளுவதற்கு அதிக விசையும், கனமில்லாத லாரியைத் தள்ளுவதற்குக் குறைந்த விசையும் என்று தெரிகிறது. இதையே விஞ்ஞான முறைப்படி ஒரு பொருளின் இயக்க வேக வீதத்தை அதிகரிக்கத் தேவையான விசையின் அளவு அந்தப்பொருள் திணிவைப் பொறுத்தது என்று கூறலாம். அதாவது பொருள் திணிவு அதிகமுள்ள பொருளின் வேகத்தை அதிகரிக்க அதிகமான விசை வேண்டுமென்றும், பொருள் திணிவு குறைவாய் உள்ள பொருளின் வேகத்தை அதிகரிக்கக் குறைவான விசையே போதுமென்றும் தெரிகிறது.

## மழையும் வெயிலும்!


பூமழை பெய்யுது வானம் — வெய்யில்
புகுந்து சிரிக்குது தானும்!
கோமகள் வருகின்ற போது — பட்டுக்
குடையைப் பிடிப்பவன் போலே!

நூல் மழை நெய்யுது வானம் — வெய்யில்
நுழைந்து சிரிக்குது தானும்!
பாய்கிற வெண்துகி லுள்ளே — சரிகை
படர்ந்து கிடப்பதைப் போலே!

கல்மழை பொழியுது வானம் — வெய்யில்
கண்ணைச் சிமிட்டுது தானும்!
சொல்மழை கேட்டு அவையோர் — நயம்
சுவைத்து மகிழ்வதைப் போலே!

புகைமழை பெய்யுது வானம் — வெய்யில்
புன்னகை காட்டுது தானும்!
பகையினை எதிரிகள் போக்கி — அன்பால்
பிணைந்து கிடப்பதைப் போலே!

—மு. பொன்னம்பலம்



தேனி வளர்ப்பு நிலையம் என்று எண்ணிவிட வேண்டாம். அமெரிக்காவிலுள்ள விஞ்ஞான நூல் நிலையம்தான் இது. இந்த நூல் நிலையத்தில் 15 வருடங்களுக்கு முந்திய அரிய புத்தகங்களும் இருக்கின்றன.




பீ. சீ. சீ.

பீ. சீ. சீ.
ஸ்தாபனத்தார் தயாரிக்கும்

சுத்தமான
தேங்காய் எண்ணெ

★ சுகாதார முறைப்படி தயாரித்து போத்தலிலும் ரீன்களிலும் அடைக்கப்பட்டது.
★ சமையல் செய்வதற்கு மிக இலகுவானதும் உருசீயுமுள்ளதும்.

நீங்கள் தேங்காய்எண்ணெ வாங்கும்பொழுது
எப்பொழுதும் பீ. சீ. சீ. அடையாளத்தையே
பார்த்து வாங்குங்கள்.

யாழ்ப்பாண ஏஜென்ட்ஸ்:

முகம்மது அலி அப்துல் அலி
பெரியகடை, — யாழ்ப்பாணம்.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**சனி 28-10-61**

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கத்தோலிக்க நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-30 திரை இசை, 8-00 நாகஸ்வரம், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வி. சோமசுந்தரம் – வயலின்

இரவு 7-15 நேயர்கடிதம், 8-30 சரஸ்வதிதேவி வயித்திலிங்கம் – பாட்டு, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 அறிவுச் சுழல், 9-45 பாமாலை, 10-00 நேயர்விருப்பம்.

**ஞாயிறு 29-10-61**

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கத்தோலிக்கநற்சிந்தனை, 7-15 காலைக் கதிர், 7-30 திரை இசை, 8-00 கிறிஸ்தவகீதங்கள், 9-00 முஸ்லிம் சமயப்பாடசாலை, 9-30 கதம்பஇசை, 11-30 சிறுவர் மலர்.

பகல் 12-15 நேயர்விருப்பம், 1-00 மாதர்பகுதி.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 பி. நாகமுத்து - பாட்டு, 5-45 திரைக்குரல், 6-15 கோவில்அஞ்சல்.

இரவு 7-15 கண்டதும் கேட்டதும், 7-30 பி. வயிரமுத்து – பாட்டு, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 'எதிர்பார்க்கவில்லை' - நாடகம், 10-00 தமிழோசை (பி. பி. ஸி. அஞ்சல்.)

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2, இரவு 7-15.)

**சனி 28-10-61**

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்தியஇசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 திருக்கோடிக்காவல் ஆர். கிருஷ்ண மூர்த்தி ஐயர் - வயலின்.

பகல் 1-00 துதிப்பாடல்கள், 1-20 பிள்ளைக்கனியமுது, 1-50 குரல் இசை, 2-10 திருக்கோடிக்காவல் ஆர். கிருஷ்ணமூர்த்திஐயர் - வயலின்.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 'சுக்ரமண்டலம்' - நாடகம், 8-15 திரைபடஇசை, 8-30 டெல்லி அஞ்சல், 8-40 இசைமாலை, 9-30 அகிலபாரத சங்கீதநிகழ்ச்சி.

**ஞாயிறு 29-10-61**

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்தியஇசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 இசைக் கோவை பி. ஆர். எஸ். மணி புல்லாங்குழல், 8-15 பழனி விஜயலட்சுமி - பாட்டு.

பகல் 12-00 சூரியகாந்தி: கதம்பநிகழ்ச்சி, 1-00 மணி மலர், 1-50 குரல்வகை, 2-10 பெண்ணுலகம், 2-30 மெல்லிசை, 3-00 மருத்துவக்குடி ராஜகோபாலஐயர் – பாட்டு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-45 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 ராகமஞ்சரி தொடர் - மூன்றுவது நிகழ்ச்சி, 9-15 சென்னைஅஞ்சல், 9-30 டெல்லி அஞ்சல், 9-45 ஒலிப் பதிவுகள்.

## குருநாகலில் நவராத்திரி விழா

குருநாகல், வெள்ளி

குருநாகல் சைவமகாசபை மண்டபத்தில் நவராத்திரி விழாவும் விஜயதசமி தினக் கொண்டாட்டமும் டாக்டர் வி. இராசாப்பிள்ளை தலைமையில் கொண்டாடப்பட்டது.

குருநாகல் நீதிபுதி திரு. வி. கே. கந்தசாமி உட்படப் பலம் பேசினர்.

## "இகத்துக்கும் பரத்துக்கும் நன்மை பயப்பது"

### நடன கலாகேசரியின் பாராட்டு

"பரத நாட்டியம் ஒரு தெய்வீகக்கலை. வழிபாட்டில் ஒரு முக்கிய அம்சம். இகத்துக்கும் பரத்துக்கும் நன்மை பயப்பது. இதைப்பயிலும் பெண்கள், நல்ல தேகக்கட்டுடன், சுக சரீரத்துடன் வாழலாம்" என்று நாட்டிய கலாகேசரி ஸ்ரீவழுவூர் ராமையாபிள்ளை சென்ற புதனன்று யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் "கலை மன்ற" மாணவிகளின் பரதநாட்டியத்தைப் பாராட்டிப் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. ராமையாபிள்ளையிடம் மூன்றுவருடகாலம் சென்னையில் பரதம் பயின்ற குமாரி திருபுரசுந்தரிகுமாரசாமி இங்கு கலைமன்றத்தை மூன்றுவருடங்களாக நடத்தி வருகின்றார். தமது சிஷ்லய, பலருக்கும் இக்கலையை மேலான முறையில் கற்பித்து வருவதையும், அக்குழந்தைகள் உயரிய முறையில் நடனமாடுவதையும் பார்க்க தமக்குப் பெருமையும் மகிழ்ச்சியும் அளிக்கிறதென்றார் திரு. பிள்ளை.

கலை அரசு சொர்ணலிங்கம் நன்றிதெரிவித்துப் பேசுகையில் ஆங்கிலப்பத்திரிகைகள், தமிழ் கலைநிகழ்ச்சிகளைப்பற்றி ஒன்றுமே எழுதாததைப் பற்றி குறை கூறினர். கலைமன்ற மாணவிகள் 14 வித நடனங்களை கச்சிதமாக ஆடி சபையோரின் கரகோஷ பாராட்டு தலைப் பெற்றனர்.

## இந்தியாவுக்கு ரூ. $9\frac{1}{2}$ கோடி

புதுடில்லி, அக் 27

இந்தியாவுக்கு ஒன்பதரைக் கோடி ரூபாய் கடன் அளிக்கும் புதிய ஒப்பந்தமொன்றில் அமெரிக்கா இன்றுகைச்சாத்திட்டது

## அரசியல் சட்டத்திருத்தம்

கொழும்பு, வியாழன்

அரசியல் சட்டத்திருத்தம் பற்றிய கமிட்டி நியமிப்பது சம்பந்தமான மசோதா விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, லங்கா சமசமாஜக் கட்சி, தமிழரசுக் கட்சி, ஐக்கிய தேசியக்கட்சி ஆகியன தனித்தனியாக பல திருத்தங்கள் கொண்டுவந்தன

இந்நிலையில் விவாதம் நாளை வெள்ளிக்கிழமை காலைவரை ஒ திவைக்கப்பட்டது.



# இ. போ. ச. ஊழியர் . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆறுமணியளவில் ராசையா என்ஜினியரிங் உதவியாளரிடம் சென்று, தண்ணீர் பம்பில் யாரோ கைவைத்துவிட்டதாகவும் அது பழுதடைந்துள்ளதாகவும் புகார் செய்தார். அதைத் திருத்தும்படி ராசையாவுக்கு உத்தரவிடப்பட்டது. ராசையா அதைச் செய்யவில்லை. 6-10-61 ல் மேற்கு டிப்போவில் பிற்பகல் 4-30 மணியிலிருந்து இரவு 10 மணிவரை 'காஷியர்' பணத்தைச் சரிபார்த்துக்கட்டிக் கொண்டிருந்திருக்கிறார். சுமார் எட்டுமணியளவில் காரியாலய 'டெலிபோன்' மணியடித்தது. அதற்கு ராசையா பதிலளித்தார்.

## வேலிக்கு அருகில் ஒரு பஸ் நிற்கிறது

"ஒரு பஸ் வாசலுக்குஅருகில் நிற்கிறது. மற்றபஸ் கீரிமலைக்கு பரீட்சார்த்தமாக ஓட்டிக் கொண்டுபோகப்பட்டுள்ளது." என்று டெலிபோன் சம்பாஷணையில் ராசையா கூறியது காஷியரின் காதில் விழுந்தது. உடனடியாக ராசையா 'டெலிபோனை' கீழே வைத்துவிட்டார். "அந்தத் தகவலைக்கேட்டவர் யார்? யார் இப்பொழுது 'டெலிபோனில் பேசியது?" என்று ராசையாவை காஷியர் கேட்டார். தனக்குத்தெரியாது என்று ராசையா பதிலளித்தார்.

## டிப்போவுக்கு ராசையா போனார்

6-10-61 இரவு 12 மணியுடன் ராசையா வேலை முடிந்து புறப்பட்டார். வீட்டுக்குச் செல்லும் வழியில் கிழக்கு டிப்போவுக்குப் போனார். எத்தனை புதிய பஸ்கள் வந்திருக்கின்றன வென்று காவற்காரரிடம் ராசையா விசாரித்திருக்கிறார்.

ஆயுதங்களுக்குப் பொறுப்பான பாலசிங்கம் என்பவர் அதற்குமுதல் நாள் டிப்போவிலுள்ள தொழிலாளர்கள் 'லைட்'வெளிச்சம் வைத்துக்கொண்டு 'கரம்' விளையாடிக்கொண்டிருப்பது காரணமாக அவர்களுடன் சண்டையிட்டதாகத் தெரிவித்திருக்கிறார். அவரால் நித்திரைசெய்ய முடியாதிருக்கிறதென்பதுதான் அவரது குறை! இந்தப் புகார் காரணமாக இரவு 10 மணியுடன் ஓய்வு அறையில் 'லைட்கள்' அணைக்கப்பட்டுவிட வேண்டுமென ராசையா உத்தரவிட்டிருக்கிறார்.

## 10 மணியுடன் 'லைட்' அணைந்தன

6-10-61 ல் இரவு 10 மணியுடன் ஓய்வு பெறும் அறையில் 'லைட்' அணைக்கப்பட்டுவிட்டன. எல்லாம் தயாராக்கப்பட்டு விட்டது!

7-10-61-ல் காலை 1-30 மணியளவில் யாழ்ப்பாணம் பொலிசாருக்கு ஒரு 'டெலிபோன்' செய்தி கிடைத்தது. அடையாளம் தெரியாத இரண்டு மூன்று பேர் ரிவால்வருடன் அங்கு வந்ததாகவும் ஆகாயத்தை நோக்கி இரண்டுதடவை சுட்டபின் சிங்களச் 'சிறி' பஸ் வண்டிக்கு நெருப்புவைத்துவிட்டுச் சென்றதாகவும்,மேற்கு டிப்போவிலிருந்து பொலிசாருக்கு 'டெலிபோனில்' தெரிவிக்கப்பட்டது. இத் தகவல் கிடைத்த சுமார் இருபது நிமிட நேரத்துக்குள் உதவி இன்ஸ்பெக்டர் தலைமையில் பொலிஸ் கோஷ்டியொன்று ஸ்தலத்துக்குச் சென்றடைந்தது.

என்றாலும் பொலிஸ்கோஷ்டி அங்கு வந்து சேர்வதற்குமுன் ரோந்து சுற்றி வந்துகொண்டிருந்த சார்ஜன்ட் உத்தியோகத்தரும் மற்றும் நான்கு இராணுவ சிப்பாய்களும் யாழ்ப்பாணம் மேற்கு டிப்போவுக்கு எதிரில் ஜனக்கூட்டம் நிற்பதையும் பஸ் வண்டிகள் பல ரோட்டில் நிறுத்தப்பட்டிருந்ததையும் கவனித்தனர். அவர்கள் தங்கள் ஜீப் வண்டியை நிறுத்திப் பார்த்தபொழுது ஒரு பஸ் எரிந்துகொண்டிருந்ததைக் கண்டனர். தொழிலாளர்கள் ஒன்றும் பரபரப்படையாமல் சர்வசாதாரணமாக எவ்விதக் கவலையுமில்லாமலிருந்ததை அவர் (சார்ஜன்ட்) கவனித்தார். ஒருவர் காயமடைந்திருந்தார்.காயமடைந்திருந்தவரை சார்ஜன்ட் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றுவிட்டு அந்த இடத்துக்குத் திரும்பிவந்தார். பொலிசாரும் வந்துசேர்ந்தனர்

இ. போ. சபை தொழிலாளர் 18 பேர் ஒரு பஸ்ஸுக்குள் இருந்ததையும் இ. போ. ச. இன்ஸ்பெக்டர் ஒருவர் காரியாலயத்துக்குச் சமீபத்தில்நின்றதையும் சிரேஷ்ட பொலிஸ அதிகாரிகள் கவனித்தனர்.

## தொழிலாளர் முயற்சிசெய்யவில்லை

தீயை அணைப்பதற்கு யாழ்ப்பாணத்திலுள்ள இ. போ. சபைத் தொழிலாளர்கள் முயற்சி செய்யவில்லை. இவை யாவும் உண்மை விபரங்கள். காரணம் இதுதான்.

தீயணைப்பு கருவியைக் கொண்டுவருமாறு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி கேட்டபொழுது அங்கு அப்படியொன்றும்இல்லையென்று தெரிவிக்கப்பட்டது. பொலிசார் தண்ணீர் 'பம்பை' நோக்கி ஓடியபொழுது 'தண்ணீர் பம்ப்' பழுதாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. பிற்பகல் 2-30 மணிக்கு தண்ணீர் வழிந்தோடிய தண்ணீர் தாங்கி, தீபபிடித்த சமயத்தில் வெறுமனே இருந்திருக்கிறது. சமீபத்தில் ஒரு கிணறு இருக்கிறது. ஆனல் அங்கு அச் சமயத்தில் வாளியைக் காணவில்லை.

தியணைக்கும் சாதனங்களிரண்டு நல்ல நிலையில் அங்கு இருந்ததை பின்னர் பொலிஸ் அதிகாரிகள் கண்டனர். பொலிசார் தீயை அணைத்தனர்.

## காதல் கடிதம் எழுதினராம்

காவற்காரரின் குடிசைக்கு வெளியிலுள்ள ஒரு வாங்கின் மீது தாம் உட்கார்ந்து தனது காதலிக்கு காதல் கடிதம் எழுதிக் கொண்டிருந்ததாகவும் திடீரென்று 'கேற்'சட்டங்களுக்கூடாக ஒரு கை நீட்டப்பட்டதைத் தான் பார்த்ததாகவும் அந்தக் கையும் அவரின் முகமும் கறுப்புத்துணி அல்லது கடதாசியினல் மறைக்கப்பட்டிருந்ததாகவும் இரவுக் காவற்காரன் தெரிவித்திருக்கிறார். வேசை மகனே,எழும்பினயென்றால் உன்னைச் சுடுவேன்" என்று அந்தக் கறுப்புத் துணியால் மறைத்திருந்த மனிதன் காவற்காரனைப் பார்த்து பயமுறுத்தியதாம். தீப்பிடித்ததைத் தாம் பார்த்ததாகவும் மற்றொரு காவற்காரர் அங்கு வந்ததும் பொலிசுக்கு போன் செய்யச் சென்றதாகவும் காவற்காரர் தெரிவித்துள்ளார். வெடிச்சத்தம் ஒன்று கேட்டதாகவும் அத் திசையை நோக்கிய பொழுது ஒரு பஸ் தீப்பிடித்து எரிந்ததாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

டிப்போ வளவுக்குள் வெடிக்கப்படாத கைக்குண்டு ஒன்றும்காணப்பட்டது. மேற்கு டிப்போ வளவுக்குள்ளும் ஒரு கைக்குண்டு கண்டெடுக்கப்பட்டது. பஸ்கள் பல வெளியே தள்ளப்பட்டும், ஓட்டியும் கொண்டுவரப்பட்டன. ஆனல் ஒன்றுகூட அக்குண்டின்மீது ஏறவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. ஏதாவது ஒரு பஸ் ஒரு குண்டின்மீது ஏறியிருந்தால் அதன் விளைவு பெரும் நாசமாக இருந்திருக்கும்.

வாக்குமூலங்கள் பதிவு செய்யப் பட்டதிலிருந்தும் ஸ்தலத்தில் நடத்திய பரிசீலனையிலிருந்தும் பின்வரும் விபரங்கள் வெளியாகியுள்ளன:-

1. வேண்டுமென்றே 'சிறி' பஸ் வண்டிகள் வாசலுக்கு அருகில் விடப்பட்டன. 2. சிறி பஸ்கள் டிப்போவுக்குள்விடப்பட்டபின் வந்துசேர்ந்த பஸ்கள் டிப்போவளவுக்குள் 'கேற்'றுக்கு தூரத்தில் விடப்பட்டன. 3. அன்று பிற்பகல் இரண்டரை மணியளவில் தண்ணீர் நிரம்பிவழிந்து கொண்டிருந்த 400 கலன் தண்ணீர் கொள்ளக்கூடிய தண்ணீர்த் தாங்கியில் விபத்து நடைபெற்ற சமயத்தில் தண்ணீர் சிறிதும் இருக்கவில்லை; அன்று மாலை ஒரு பஸ் கூட கழுவுவதற்கு தாங்கியிலிருந்ததண்ணீர் உபயோகிக்கப்படவில்லை. 5. அன்று மாலை பழுதடைந்திருந்த தண்ணீர் 'பம்பை' திருத்த முயற்சி செய்யப்படவில்லை. 6. சிறுபழுதானபோதிலும் தண்ணீர்ப்பம்பின் பழுது என்னவென்பதை மின்சார தொழிலாழியான ராசையாவுக்கு கண்டுகொள்ளமுடியாது போய்விட்டது, 7. கிணற்றிலிருந்த வாளி மறைந்தது. இதனல் தண்ணீர் இறைக்க முடியாது போனது. 8. தீயணைக்கும் கருவிகள் நல்ல நிலையிலிருந்தும் இ. போ. சபை ஊழியர்கள் அதை உபயோகிக்கவில்லை. 9. தீயை அணைப்பதற்கு டிப்போ ஊழியர் எவரும் முயற்சிசெய்யவில்லை. 10. டிப்போ வளவுக்குள்ளிருந்த இதர பஸ்கள் மீது தீபிடிக்கக்கூடிய சாத்தியமில்லாதிருந்தபோதிலும் அவைகளை வெளியே எடுத்துவிடுவதில் சுறுசுறுப்புக் காட்டப்பட்டது. 11. வெடிக்கப்படாத குண்டுகள், அங்கிருந்து பஸ்கள் வெளியே எடுக்கப்பட்டபின் வைக்கப்பட்டன வென்பதற்கு

# புளி இறக்குமதியில்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பேரீச்சம் பழங்கள் கலந்து விற்கப்படுவதாயும், அரசாங்கம் நூற்றுக்கணக்காடன் புளியை இறக்குமதி செய்தும் கூட மக்களின் பாவனைக்குக் கிடையாது கஷ்டமாயிருக்கிறதென்றும், இறக்குமதி செய்யப்படும் புளியில் 90 சதவிகிதம் உப்பும், மணலும் கலந்திருப்பதாய் நிபுணர்கள் கூறியிருக்கிறார்கள் என்றும்மேலும் அவர் தெரிவித்தார்.

(பின் இறக்குமதி செய்யப்பட்ட புளியை அவர் பியூன் மூலம் மந்திரிக்கும், இதர அங்கத்தினர்களுக்கும் காட்டினர்)

திரு. சிங்கிள்டன் சால்மன் பேசுகையில் புதிய சட்டத்தின் கீழ் அரிசியும், பருப்பும், கருவாடும் விநியோகிக்கும் தோட்ட ஸ்டோர்களும்கூட வர்த்தகர்களாகப் பதிவு செய்துகொள்ள வேண்டியிருக்குமெனக் கூறினர். காலி மெம்பர் அடிக்கடி "சாம்பிள்களை"க் கொண்டுவந்து காட்டுவதால் அவரும் ஒரு வர்த்தகராகப் பதிவு செய்து கொள்ளவேண்டி யிருக்கும் (சிரிப்பு) என்றும் கூறினர்.

சபை முதல்வர் திரு. ஸி பி. டி' சில்வா பேசுகையில் இச்சட்டத்தைச் சில தினங்களுக்கு முன் இச்சபை அங்கீகரித்தது என்றும் இதில் புதிதாக ஒன்றுமில்லையென்றும், சகல புதிய வர்த்தகர்களும் 30 நாட்களுக்கு ஸ்தலங்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

---

ஒரு அறிகுறி. 12. காயமடைந்தவர் விழுந்து கிடந்ததாகக் கூறப்பட்டஇடத்தில் இரத்தக் கறை இல்லாதிருந்தது. 13. ராசையாவுக்கும் இனந்தெரியாதவருக்குமிடையில் நடைபெற்ற 'டெலிபோன்' சம்பாஷணையும் அதில் 'சிறி' பஸ் விடப்பட்டுள்ள இடம்பற்றித் தெரிவிக்கப்பட்டதகவலும்.

## விற்பனைக்கு

கண்டி ரோட்டுக்கு அருகாமையிலுள்ள நெடுங்குளம்(அரியாலை) ரோட்டில் 2 பரப்புக் காணி விற்பனைக்கிருக்கிறது. உரிமையாளர் ந. சின்னையா, 65, மெயின் ஸ்றிற், யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில்விசாரணை செய்துகொள்ளலாம்.


அக்டோபர் 27ம் திகதி வெள்ளி முதல்

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)

திரை உலகத்திற்கே ஓர் இலக்கணம் வகுக்கும் திரை ஓவியம்



மனோஹர், தேவிகா

எல். விஜயலக்ஷ்மி, டி. ஆர். ராமச்சந்திரன்

நடித்த

எம். ஏ. வி. பிக்சர்ஸ்

பாஞ்சாலி

மனோஹரா (யாழ்ப்பாணம்)

இன்றும் நாளையும் மட்டும் காலை 10-30, பி. ப. 2-30 மெட்னிக் காட்சி.

பராசக்தி

தினசரி மாலை 6-30, இரவு 9-30 குருளு பெத்த (சிங்களம்)



சாவகச்சேரி தேவேந்ராவில்

வெற்றிகரமான 2-வது வாரம்!

தினசரி மாலை 6-15 இரவு 9-30 மணி
(சனி, காலை 10-00 மணிக்கு மெட்னி)



சமுதாயத்தின் பேதங்களை அகற்றி, சமத்துவ நெறியை மலரச் செய்ய,

எஸ். எஸ். ராஜேந்திரன் அளிக்கும்

தங்கரத்தினம்

காணத் தவறாதீர் !!

எம். ஜி. ராமச்சந்தர், கலைஞர் கருணாநிதி, அறிஞர் அண்ணாத்துரை, கே. ஆர். ராமசாமி இன்னும் பல தி. மு. க. முன்னணி வீரர்கள் தோன்றும் காட்சிகளை !


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவாசன அச்சகத்தில் 1961-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 28-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.